# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550



ஜீன்– 2020

visit us: www.pallavipathippakam.in
https://ayidhaezhuthu.in

பல்லவி பதிப்பகம்

ISSN : 2278-7550
2278-7550

# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

## INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

**ISSN : 2278-7550**

UGC - பல்கலைக் கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது

**UGC RECOGNISED JOURNAL**

**UGC NO : 42330**

மலர் : 7 | 01 - ஜீன் - 2019 | இதழ் : 6

**பதிப்பாசிரியர்**

**நல் நடராசன்**

தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.

0424-2251545, 94422 51549
97919 51549, 63817 01339

**பல்லவி பதிப்பகம்**

118, மேட்டூர் சாலை,
கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு – 638011.

pallavipublications@gmail.com
ayidhaezhuthu@gmail.com



**EDITORIAL BOARD**

**Dr.C.Thiyagarajan**
*Tamil University, Thanjavur.*
mcthiyagu@gmail.com

**Dr.K.Ramesh**
*Thiruvalluvar University, Vellore.*
grameshtu@gmail.com

**Dr.B.Sathiyamoorthy**
*Madurai Kamaraj University, Madurai.*
tamilkanikani@gmail.com

**Dr.P.Jayakrishnan**
*Kerala University, Thiruvanandapuram.*
pjktamil@gmail.com

**Dr.K.Sankaranarayanan**
*Chennai University, Chennai.*
krksankaraatamil@gmail.com

**Dr.Alibhava**
*Bharathidasan University, Trichy.*
alibavapkm@gmail.com

**Dr.S.Aranganathan**
*Tamil Nadu Open University, Chennai.*
arangantnou@gmail.com

**Dr.U.Karuppathevan**
*Madurai Kamaraj University, Madurai.*
ukthevar@gmail.com

**ஆசிரியர் குழு**

**முனைவர் சி.தியாகராசன்**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
mcthiyagu@gmail.com

**முனைவர் க.இரமேஷ்**
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்.*
grameshtu@gmail.com

**முனைவர் போ.சத்தியமூர்த்தி**
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.*
tamilkanikani@gmail.com

**முனைவர் ப.ஜெயகிருஷ்ணன்**
*கேரளா பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.*
pjktamil@gmail.com

**முனைவர் கி.சங்கரநாராயணன்**
*சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.*
krksankaraatamil@gmail.com

**முனைவர் உ.அலிபாவா**
*பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.*
alibavapkm@gmail.com

**முனைவர் சு.அரங்கநாதன்**
*தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்,சென்னை.*
arangantnou@gmail.com

**முனைவர் உ.கருப்பத்தேவன்**
*மதுரை காமராஜ் பல்கலைக்கழகம், மதுரை.*
ukthevar@gmail.com

**Dr.S.Kavitha**
*Tamil University, Thanjavur.*
skavithatamil@gmail.com

**Dr.Manonmanidevi Annamalai**
*Sulthan Itrecue Kalviyal University, Malaysia.*

**Dr.Paramasivam Muthuswamy**
*Malasyia University, Malasyia.*
mparam98@gmail.com

**R.F.Arooz**
*Raapa International Campus, Sri Lanka.*
raapa.arooz@gmail.com

**ADVISORY BOARD**

**M.Senthilkumar**
*Periyar University, Salem.*
senthiltamilnesan@gmail.com

**Dr.V.S.Sreenivasan**
*Nandha Arts and Science College, Erode.*
srivc2345@gmail.com

**Dr.T.K.Anuradha**
*Trinity College For Women, Namakkal.*
anukeerthigan@gmail.com

**Dr.R.Nirmala Devi**
*Vellalar Womens College, Erode.*
prnirmaladevi@gmail.com

**Dr.K.Gayathiri**
*Government Arts College, Chidambaram.*
gayathiripraba1981@gmail.com

**Dr.S.Kumaran**
*University of Malaya, Malaysia.*
skumaran.um@gmail.com

**Dr.S.Senthilkumar**
*Annamalai University, Annamalai nagar.*
dr.senthilkumarcdm@gmail.com

**Sellathurai Sutharsan**
*University of Peradeniya, sri Lanka,.*
sellathuraisutharsan@gmail.com

**Dr.N.Sathya**
*Government College For Women, Kumbakonam.*
drsathiyatamil@gmail.com

**Balasundaram Elayathamby**
*Annamalai Canada Campus, Canada.*
Balasudarame@yahoo.com

**Dr.D.Umadevi**
*University of Delhi, Delhi,*
umadchitra@gmail.com

**Dr.P.Senthilkumar**
*Periyar University, Dharmapuri.*
senthakil06@gmail.com

**முனைவர் ச.கவிதா**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
skavithatamil@gmail.com

**முனைவர் மனோன்மணிதேவி அண்ணாமலை**
*சுல்தான் இட்ரீசு கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா.*

**முனைவர் பரமசிவம் முத்துசாமி**
*மலேசியா பல்கலைக்கழகம், மலேசியா.*
mparam98@gmail.com

**R.F.அரூஸ்**
*ராபா பன்னாட்டு வளாகம், இலங்கை.*
raapa.arooz@gmail.com

**ஆலோசனைக் குழு**

**ம.செந்தில்குமரர்**
*பெரியார் பல்கலைக்கழகம், சேலம்.*
senthiltamilnesan@gmail.com

**முனைவர் வெ.ச.சீனிவாசன்**
*நந்தா கலை அறிவியல் கல்லூரி, ஈரோடு.*
srivc2345@gmail.com

**முனைவர் தா.க.அனுராதா**
*டிரினிடி மகளிர் கல்லூரி, நாமக்கல்.*
anukeerthigan@gmail.com

**முனைவர் நிர்மலா தேவி**
*வேளாளர் மகளிர் கல்லூரி, ஈரோடு.*
prnirmaladevi@gmail.com

**முனைவர் க.காயத்ரி**
*அரசு கலைக்கல்லூரி, சிதம்பரம்.*
gayathiripraba1981@gmail.com

**முனைவர் எஸ்.குமரன்**
*மலாயாப் பல்கலைக்கழகம், மலேசியா.*
skumaran.um@gmail.com

**முனைவர் ச.செந்தில் குமரர்**
*அண்ணாமலைப்பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.*
dr.senthilkumarcdm@gmail.com

**செல்லத்துரை சுதர்சன்**
*பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை.*
sellathuraisutharsan@gmail.com

**முனைவர் நா.சத்யா**
*அரசினர் மகளிர் கல்லூரி, கும்பகோணம்.*
drsathiyatamil@gmail.com

**பாலசுந்தரம் இளையதம்பி**
*அண்ணாமலை கனடா வளாகம், கனடா.*
Balasudarame@yahoo.com

**முனைவர் D.உமாதேவி**
*டெல்லி பல்கலைக்கழகம், டெல்லி,*
umadchitra@gmail.com.

**முனைவர் பொ.செந்தில்குமரர்**
*பெரியார் பல்கலைக்கழகம், தருமபுரி.*
senthakil06@gmail.com

# படைப்புகள் வரவேற்கப்படுகின்றன...!

**ஆய்த எழுத்து** - தமிழியல் ஆய்வுக்கான ஒரு புதியகளம். இவ்விதழ் 2013 ஆம் ஆண்டு முதல் காலாண்டு இதழாக வெளிவந்தது. 2018 இல் இருந்து மாத இதழாக வெளிவருகிறது. பேராசிரியர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் அனைவரும் கட்டுரை எழுதலாம். சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல் இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய பிற துறைகள் அனைத்தும் பொருளாகலாம்.

கட்டுரைகளில் கூறப்படும் கருத்துகளுக்கு அக்கட்டுரை ஆசிரியரே பொறுப்பாவார். கட்டுரையாளர்களின் கருத்து இதழ் ஆசிரியர் குழுவின் கருத்தினை பிரதிபலிப்பன அல்ல. படைப்புகளைச் சுருக்கவும், திருத்தவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு. கட்டுரைகள் ஆய்வுத் தரமுடையவைகளாக அமைதல் வேண்டும். ஆய்வுப் பொருளுக்கு முரண்பட்டதாக அமையும் கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது. இவ்விதழுக்கு கட்டுரை அனுப்ப விரும்புவோர் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

1. **பொருள்** : சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல், இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய அனைத்தும் இதன் பொருளாகலாம்.

2. **அளவு** : MSWord இல் A4 அளவில், 1.5 வாக்கிய இடைவெளியில் (Lining Space), பாமினி (Bamini Font) - 12 புள்ளி எழுத்தளவில், மூன்று முதல் ஐந்து பக்கங்களுக்குள் கட்டுரை அமைய வேண்டும்.

3. **முகவரி** : கட்டுரைத் தலைப்பின் கீழ் ஆசிரியர் பெயர், பதவி, முகவரியும், கட்டுரைமுடிவின் கீழ் இதழ் அனுப்ப வேண்டிய முகவரி, மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண்களும் இடம்பெறவேண்டும்.

4. **கட்டுரை அனுப்பும் முறை** : கட்டுரையை ayidhaezhuthu@gmail.com (Or) pallavipublications@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

5. **சந்தா** : தனி இதழ் விலை ரூ.350/- இதழைத் தொடர்ந்து பெற விரும்புவோர் உறுப்பினர் கட்டணம் செலுத்தலாம். ஒரு ஆண்டிற்கு 12 இதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 ஆண்டுக்கட்டணம் (தனி நபர்) | - | ரூ. 3000/- |
| 1 ஆண்டுக்கட்டணம் (நூலகம், கல்வி நிறுவனங்கள்) | - | ரூ. 3600/- |

6. **கட்டணம் செலுத்தும் முறை** : உறுப்பினர் (சந்தா) கட்டணத்தை **PALLAVI PATHIPPAKAM** என்ற பெயரில் வரைவோலையாக (**DD**) ஈரோட்டில் மாற்றிக் கொள்ளத்தக்க வகையில் (**PAYABLE AT ERODE**) அனுப்பலாம். இணையவழி, (**NET BANKING**), அலைபேசி (**MOBILE BANKING**) வங்கி பரிவர்த்தனை உடையவர்கள் **NEFT** முறையிலும் பணம் செலுத்தலாம்.

**A/C Name: PALLAVI PATHIPPAKAM.**
**A/C Type : CA,**
**A/C No : 33679969977.**
**Bank : STATE BANK OF INDIA,**
**Sathy Road, Erode -638 011.**
**IFSC : SBIN0016100.**


**பல்லவி பதிப்பகம்**
118, மேட்டூர் சாலை, கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638011.

0424-2251545, 94422 51549
97919 51549, 63817 01339

**pallavipublications@gmail.com**
**ayidhaezhuthu@gmail.com**


**படைப்பாளர்களின் கவனத்திற்கு ....**

இதுவரை வெளியான, அனைத்து ஆய்த எழுத்து இதழ்களையும் எங்களது **www.pallavipathippakam.in** இணையத்தளத்தில், இதழ்கள் - ஆய்த எழுத்து பகுதியில் முழுமையாக பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம்.

**அல்லது**

**https://ayidhaezhuthu.in** என்ற இணையத்தளத்தில் பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம். அவ்வாறே தங்களது ஆய்வுக்கட்டுரைகளை இந்த இணையத்தளத்தின் வழியாக அனுப்பலாம்.

# பொருளடக்கம்

## CONTENT


1. சங்க இலக்கியத்தில் வாழ்வியல் பண்பாடுகள்

*க.மகேஸ்வரி - 1

2. நற்றிணை காட்டும் பண்பாட்டுக் கருப்பொருள்

*க.மீனா - 5

3. புறநானூற்றில் வாழ்வியல் நீதிகள்

*ப.பிரியா - 9

4. நற்றிணையில் தமிழர் பண்பாடு

*ப.விஜயலட்சுமி - 13

5. நாட்டுப்புறப் பாடல்களில் உவமைகள்

*மோ.கோமதி - 17

6. சித்தர் பாடல்களில் சமுதாய சிந்தனைகள்

*ஜெ.சி.சுதா - 20

7. பாரதிதாசன் படைப்புகளில் தமிழுணர்வு

*முனைவர் அரங்க.பாரி - 24

8. பன்னிரு திருமுறை திருமந்திரம் காட்டும் சமூகம்

*த.வசந்தி - 30

9. வரலாற்று நோக்கில் ஏறுதழுவல்

*சு.மகேஷ் பாண்டி - 33

10. தொல்காப்பியரின் மெய்ப்பாட்டியல் விளக்கத்தில் தமிழர்களின் பண்பாட்டு அடையாலங்கள்

*முனைவர் அ.நடராஜன் - 37

11. அன்பாதவனின் “ஒத்த அடி” சிறுகதை காட்டும் பண்பாட்டுக் கூறுகள்

*சி.சசிக்குமாரி - 40

12. அந்திவானம் நாவலில் குடும்ப உறவுமுறைச் சித்தரிப்பு

*செ.ரேவதி - 44

# சங்க இலக்கியத்தில் வாழ்வியல் பண்பாடுகள்

***க.மகேஸ்வரி,** *பி.ஏ, பி.எட், எம்.ஏ, ஆய்வியல் நிறைஞர், தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), திருச்செங்கோடு 637 205.*

**முன்னுரை**

தமிழின் தொன்மையான இலக்கியங்களுள் தனித்துவ இலக்கியக் கூறுகளைக் கொண்டு விளங்குவது சங்க இலக்கியமாகும். இது அகம் புறம் என்னும் பாகுபாடுகளுடன் 'பாட்டும் தொகையும" என்ற இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தனக்கென தனித்தன்மைப் பெற்று விளங்கி வருகின்றது. தொகை வாய்ந்த சிறப்பினைக் கொண்டு விளக்குவதால் காலத்தினைக் காட்டும் கண்ணாடியாக சங்க இலக்கிய நூல்கள் விளங்குகின்றன. சங்ககால மக்களின் வாழ்வியலை எடுத்துரைக்கும் விதமாக தமிழப் பண்பாடு நாகரிகம், கலாச்சாரம், மொழி, மரபு வரலாறு, கலை, இசை, சமூகப் பொருளாதாரம் அரசியல் போன்றவற்றை பாருக்கு பறைசாற்றி நிற்கின்றன.

**பண்பாடு**

**'பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்'**

என்கிறது. கலித்தொகை பண்பாடு என்பது குறிப்பிட்ட சமூகத்தின் அடையாளக் குறியீடு ஆகும். மனிதனின் பண்பட்ட நிலையை கூறுவதாகும். குறுந்தொகையில் நெடுங்காலமாக பின்பற்றப்படும் மக்களின் பண்பட்ட நிலையே பண்பாடு. எல்லாருடைய பண்புகளையும் அறிந்து அவர்களுக்கேற்ப நன்னெறியில் ஒழுகத்தில் இருப்பது பண்பாடு ஆகும். 'பண்பாடு என்பது சமுதாயத்தில் மனிதன் ஒரு உறுப்பினர் என்ற முறையில் அவன் பெறுகின்ற அறிவு, நம்பிக்கை, கலை, அறம், சட்டம், பழக்கவழக்கங்கள் இன்ன பிற திறன்கள் யாவும் ஒருங்கே அடங்கிய முழுமையான கூறு பண்பாடு' என்று போராசிரியர் எஸ்.வையாபுரி பிள்ளை கூறுகிறார்.

முறையையானது மக்களின் பழக்கவழக்கங்கள், நீதிநெறிமுறைகள் சமூக ஒழுக்கம், வழிபாட்டு முறை, திருமண முறையை, நம்பிக்கைகள் போன்ற பலக் கூறுகளை உள்ளடாக்கியதாக திகழ்வதால் சமூகத்தின் உறவுகள் மென்மேலும் வலுப்பெற்று அமைகின்றன.

**இல்லறம்**

சங்க இலக்கியங்களில் இல்லற பண்பாக பெரிதும் வலியுறுத்தப்படுவது விருந்தோம்பல் ஆகும் விருந்திரைப் போற்றும் மாண்பு சங்க இலக்கியத்தின் தலையாகப் பண்பாகும். நம் பழந்தமிழர் காக்கும் கரைதலை வைத்தே விருந்தினர் வரவே விருப்பத்துடன் எதிர்நோக்கினர் என்பது,

**'விருந்து வரக்கரைந்த காக்கையது பலியே'** (குறுந் - 210)

என்ற வரியின் மூலம் நமக்கு புலனாகிறது. காக்கை கரைவது விருந்தினர் வரவே உணர்வதற்காக என்ற பழந்தமிழரின் மரபு விருந்தோம்பல் பண்பை நமக்கு புலப்படுத்துகிறது.

தன் வீட்டிற்கு மனம் மகிழும் வண்ணம் அமுது படைப்பது தமிழரின் மனமுவந்த பண்பாகும். வாயில் கதவைத் தாழிடுவதற்கு முன்பு யாரவது வாயிற் போக்கார் திண்ணையில் பசியுடன் உள்ளானரா? பசியுடன் இருந்தால் அவர்களின் பசியை போக்க, அவர்களுக்கு உணவிட்ட விருந்தோம்பும் மாண்பை,

**‘புல்லும் மாவும் புலம்பொடு வதியே**

**நுல்லென வந்த நரின் மாலைப்**

**புலர்புகு வாவில் அடைய கடவுனர்**

**வுாரவிட உளரோஎனவும்’**

என்று வினவும் பாடல் வரிகள் தமிழரின் விருந்தோம்பும் மனித நேய மாண்பை அழகாக எடுத்துரைக்கிறது.

**தொழில்**

சங்க கால மக்கள் இயற்கையோடு இணைந்த வாழ்க்கை வாழ்ந்தனர். காலத்தினை பருவங்களாக பகுத்தம், நிலத்தினை ஐந்திணைகளாகப் பிரித்தும் நிலத்தின் தன்மைகளுக்கேற்ப தொழில் செய்தனர். நாட்டின் பொருள் வளத்திற்கும் உணவு உற்பத்திக்கும் உழவு தொழிலை உயிராக அமைந்தது.

**‘அரகத்து அன்ன செந்நிலப் பெருவழி’** ***(அகம் - 1)***

என்ற பாடல் வரி தொழில் செய்யும் நிலத்தின் தன்மையினையும்,

**‘குடிநிலை வல்சிச் செஞ்சல் உழவு’** ***(பெரும் - 13)***

என்ற பாடல் வரி மண் வளம் மிக்க வயல்கள் எருதினைப் பூட்டி நிலத்தினைச் செம்மைப் படுத்துவதும் மக்களின் களமர், உழவர் குடிநிலையையும் எடுத்துரைக்கின்றது வயல்களில் வேலை செய்வோர் உழவர் என்று அழைக்கப்பட்டனர். நிலத்தை வன்புலம், மென்புலம் பாகுபடுத்தும் பாங்கை பரிபாடலில் காணமுடிகிறது

**‘விளைவதை வினையெவன் மென்புல வன்புலக்**

**குளமா உழவர் கடிமறுகு பறசார்’**

என்ற பாடல் வரிகள் இதளை உணர்த்துகின்றது

**வாணிகம்**

நம் பழந்தமிழ் மக்களிள் உழவுத் தொழில் மட்டுமல்லாது பண்டமாற்று முறையில் வாணிகம் செய்தனர் என்பதை,

**‘தமவும் பிறவும் ஒப்ப நாடி**

**கோள்வதூஉம் மிகைகொளாது**

**கொடுப்பதூஉம் குறை கொடாதுதை**

**வெளிப்படையாகக் கூறி வாணிபம் செய்தனர்.**

**பல்பல்பண்டம் பகர்ந்து வீசும்**

**தொல் கொணடி துவன்று இருக்கை’** ***(பட்டின – 208)***

என்ற பாடல் வரி விளக்குகிறது. வணிகர்கள் தம்முடைய பல பண்டங்களையும் பிறருடைய பல பண்டங்களையும் வேறுபடுத்தி நோக்காமல் ஒப்ப ஆராய்ந்துக் காண்பர் தாம் கொள்ளும் பொருள்களைத் தாம் கொடுக்கும் பொருள்களுக்கு மிகுதியாக கொள்வதில்லை தாம் கொடுக்கும் பொருள்களையும் வாங்கும் பொருள்களுக்குக் குறைவாகக் கொடுப்பதில்லை. தங்களுக்குவரக்கூடிய இலாபத்தை இந்நெறியில் நின்ற வாணிகம் செய்ததால் சங்க

காலத்தில் சிறந்து விளங்கினா் இதன் மூலம் பண்டையக்கால வணிகா்திறன் நடுவுநிலையை ஏனையோா் வாழ்விற்கு ஆதாரமாக விளங்குவது புலனாகிறது

**'சிலதா் காக்கும் சேக உயா் கரைப்பின்'** (பெரும் - 224)

என்ற பாடல் வரி இங்கு ஒப்ப நோக்கத்தக்கது 'சலதா் எனும் தொழில் செய்வோரையும் சேன் உணா் கரைப்பு என்பது பண்டக சாலையும் குறிப்பதாக அமைந்தள்ளது.

**போர் முறை**

சங்க கால வேந்தா்கள் போருக்குப் படையெடுத்துச் செல்லும் போது அவ்வேந்தன் சின்னம், படையின் வலிமை அரசின் சிறப்பு போன்றவை வெளிகாட்டப்படுகிறது.

**'வென்கோட்ட இரும்பீணம் குருதி ஈா்ப்பு**

**ஈா்ஜம்பதின்முரும் பொருது களத்து அலிபட**

**பேர் அமா்க் கடந்த கொடுஞ்சி தெடுந்தோ்**

**ஆராச் செரவீன் ஐவா் போ'** (பெருங் - 417)

என்ற பாடல் வரிகளில் தன் மேல் படையெடுத்து வந்த பகைமன்னரை இளந்திரையன் ஓட ஓட விரட்டினான் எனறு திரையனின் சிறப்பை கூறவந்த ஆசிரியா் அவனின் போர்கள் வீரச் செயலுக்கு மகாபாரத்தில் கௌரவா் நூற்றவரும் பாண்டவா் ஐவருடன் போரிட்டு இறந்துபட்ட செயலை உவமையாக்கியுள்ளாா். பட்டினப்பாலையில் திருமாவனவனின் போா்ச் சிறப்பு.

**'மலையகழ்க் குலனே கடல் தூா்க்குலலே**

**வான் வீழ்ககலனே வளி மாற்றுவனெ**

**என தான் முன்னிய துறை போா்கலின்'முனை பட்டின – 273)**

என்ற வந்த பாடல் வரிகள் நமக்கு எடுத்துரைக்கின்றது. திருமாவளவன் மலையை அகழ்க்குவன் கடல் தூா்க்குவன் என்னும் தொடா்புகள் அவனது போா் புரியும் வீரச் சிறப்பை நமக்கு தெளிவாக விளக்குகிறது. இங்கு மலை கடல் வானம் ஆகியவற்றை உவமையாக வைத்து பாடியுள்ள திறம் போற்றுத்தக்கது.

**வழிப்பாட்டு முறை**

ஒரு செயலினைத் தொடங்கும் முன் கடவுளை வழிபடும் முறை சங்க காலம் முதல் இன்று வரை காணப்படுகிறது. வழிபாட்டின் மூலம் நன்னெறியைப் பற்றச் செய்ய வேண்டும் என்ற உயா்ந்தக் கொள்கை பினபற்றப்படுகிறது..

**'மாயோன் மேய காடுறை உலகமும்**

**சேயோன் மேய மைவறை உலகமும்**

**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**

**வருணன் மேய பெருமணல் உலகமம்**

**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்**

**………………………………'**

ஐவகை நிலங்களுக்குரிய தெய்வங்களைத் தொல்காப்பியம் காட்டுகிறது.

**'ஆன்டு ஆண்டு ஆயினும் ஆக் குணதக்**

**முந்துநீ கண்டுழி முகன் அமா்ந்து ஏத்தி**

**ஐக்தொமூஉப் புரலி கால்உற வணங்கி'** (திருமுரு – 250 – 253)

முருகக் கடவுள் யாண்ம் உளன. ஆருதிவனை கண்டவுடன் முகத்தால் விரும்பி வாயால் புகழ்ந்து வாழ்த்தி கையை தலைமேல் குவித்துத் தொழுது திரவடிகளிலே வீழ்ந்து வணங்குதல் வேண்டும் என இறைவனை வழிபடும் முறையை இப்பாடல் வரிகள் நமக்கு உணர்த்துகின்றது.

**'செங்களம் படக்கென்று அவுணரத் தேய்த்த**

**சேங்கோ லம்பின் செங்கோட்டி யானைத்**

**கழநொடிச் செபளபப் புன்றும்**

**குருதி புவின குலைக்காந் தட்டே' (குறுந் - 1)**

என்று அமைந்தப் பாடலில் போர்களத்தில் செங்கோலைக் கொண்ட முருகனின் வீரச் செயலும் அவரின் தோற்றத்தையும் சுட்டுவது மக்கள் கொண்டிருந்த இறைக் கொள்கையையும் வழிபாட்டு நம்பிக்கையும் உணர முடிகிறது.

**தொகுப்புரை**

1. சங்க இலக்கியத்தில் நூல்கள் மன்னன் முதல் மக்கள் வரை அவர்களின் வாழ்வியல் நெறிமுறைகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் விளக்கும் கருவுமாக திகழ்கிறது.

2. விருந்தோம்பல் மூலம் பண்டைய தமிழக மக்களின் மனிதநேய மாண்பு குன்றின் மேலிட்ட விளக்காக உயர்வு பெறுகிறது.

3. தொழில் முறையின் மூலம் உற்பத்தி மற்றும் பண்டமாற்று முறை போன்ற நுட்பமான செய்திகள் அமைந்துள்ளன.

4. மன்னரின் போர் சிறப்பு படைசிறப்பு ஆகியவற்றை இயற்கையுடன் உவமை படுத்தியுள்ளனர்.

5. மக்கள் இறை வழிபாட்டை மேற்கொண்டதால் ஒழுக்கநெறிதவறாமல் கடடுப்பாட்டுடன் வாழ்ந்தனர்.

சங்க இலக்கியங்கள் மூலம் நம் தமிழரின் விருந்தோம்பல், பண்பாடு, தொழில், பண்டமாற்று முறை, போர் முறை, படைச்சிறப்பு, வழிபாடு மூலம் ஒழுக்க நெறி தவறாமை போன்ற பண்பாட்டுக் கூறுகள் இதன் மூலம் மக்களின் சமூக அடையாளங்களும் நமக்கு புலானகிறது.

# நற்றிணை காட்டும் பண்பாட்டுக் கருப்பொருள்

***க.மீனா,** *ஆய்வியல் நிறைஞர், தமிழ்த் துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), எளையாம்பாளையம், திருச்செங்கோடு.*

பழந்தமிழ் மக்களிடையே பண்பட்ட வாழ்க்கை முறை நெடுங்காலமாகத் தொடர்ந்து வந்தமையால் சங்க இலக்கியத்தில் பண்பட்ட வாழ்க்கை முறைக்குரிய அறக்கருத்துக்கள் நிறைந்து காணப்படுகின்றன. சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகை நூல்களுள் முதலாவதாக வைத்து எண்ணப்படுகின்ற சிறப்பினை உடையது நற்றிணை. நற்றிணையில் உள்ள மக்களின் பண்பாடு பற்றி கருத்துக்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**நற்றிணையில் கருப்பொருள்**

முதற்பொருள் கருப்பொருள், உரிப்பொருள் ஆகிய மூன்றும் அக்பாடல்களுக்கு மிகவும் முக்கியமானதாக ஆகும். இதனை,

**“முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே**

**நூவலும் காலை முறைசிறந் தனவே**

**பாடலுட் பயின்றவை நாடுக் காலை” (தொல் பொருள்)**

என்ற நூற்பாவில் மூலம் தொல்காப்பியம் விளக்கியுள்ளார். நற்றிணையில் குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை என்ற ஐவகை நிலப்பகுப்பில் கீழ் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைமுறை விருந்தோம்பல், வீரச்செய்திகள், உணவு, உறைவிடம், குடும்பம், திருமணம், கல்வி, பண்டமாற்று முறை, தெய்வநம்பிக்கை போன்ற பல்வேறு நிலைகளை ஆராய்ந்து அவற்றின் சிறப்பினை வெளிப்படுத்த கருப்பொருள் துணை நிற்கிறது.

**உறைவிடம்**

குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை என்ற ஐவகை மக்களின் வாழ்விடம் பகுக்கப்பெற்றுள்ளது. ஐவகை மக்களின் வாழ்விடம் மலைச்சாா்ந்த பகுதிகளையும் காடுகள் சாா்ந்த பகுதிகளையும் வயல் சாா்ந்தும் கடல் பரப்பினை சாா்ந்தும் வாழ்விடங்களை அமைத்துக்கொண்டனா். என்பதை நற்றிணை பாடல்களின் வழி அறிய முடிகிறது. மக்களிடையேக் காணப்பட்ட உணவு முறை மலா்கள், விலங்குகள், தாவரங்கள், பறவைகள். இசைக்கருவிகள், தொழில் வாழ்க்கை முறை ஆகியவை நிலத்திற்கேற்ப வேறுபட்டு இருப்பதையும் காணமுடிகிறது.

**உணவு**

சங்க கால மக்கள் தத்தம் நிலத்தால் பகுதிக்கேற்ப தங்களுடைய ஆரோக்கியமான உணவினை அமைத்துக்கொண்டனா். மலைநெல், மூங்கில் அரிசி, திணை அரிசி, சாமை, செந்நெல்லரிசி, வெண்ணெல்லரிசி, மீன் போன்ற பற்பல இயற்கையோடு இசைந்த உணவினை மேற்கொண்டு வாழ்ந்து வந்தனா். வேட்டையாடுதல் குறிஞ்சி நில மக்களுக்கே உரியது என்றாலும் பிற நில மக்களுக்கும் தங்களுடைய நிலத்திற்கேற்ப உணவுகளை உற்பத்தி செய்தும் சேகரித்தும் வாழ்ந்துள்ளனா் என்பதை

**"கோடு துவையால்கோள் வாய் நாயோடு**

**காடு தேர் நகையிய வயமன் வேட்டு"** *(நற் -276)*

என்ற பாடல்கள் மூலம் மக்களின் உயர்ந்த மனப்பாங்கும் உணவும் முறையும் தெரியவருகிறது.

**விருந்தோம்பல் சிறப்பு**

தமிழ் மக்களின் விருந்தோம்பல் பண்பு அவர்களுடைய வாழ்வில் இரண்டறக் கலந்த ஒன்றாக திகழகிறது என்பதை நற்றிணையில் உள்ள பாடல் வரிகள் மூலம் அறிய முடிகிறது. இல்லறம் என்னும் நல்லறம் சிறப்புறுவதற்கு விருந்தோம்பல் என்னும் அறத்தினை இல்லறத்தார் கடைப்பிடித்து வந்துள்ளனர். தலைவனும் தலைவியும் தான் இல்லறத்திற்கு உரியவர்கள் என்றாலும் விருந்தோம்பால் பண்பு தலைவிக்கே உரித்தானதாகும்.

**"கல்வி வந்த நல்விசை விருந்திற்குக்**

**களரின்று அரிவை தெப்தழுந் தட்ட"**

என்ற நற்றிணை பாடல் வரிகள் மூலம் தலைவியின் விருந்தோம்பல் சிறப்பினை அறிய முடிகிறது.

**தொழில்**

பண்டைச் சமூக மக்களின் வேட்டைத்தொழில் வேளாண்மை. சாமை விதைத்தல், வரகு விதைத்தல் அவற்றை அரிதல் கடாவிடுதல் கால்நடைகளை மேய்த்தல் கொல்லேறு தழுவுதல் குறைவை கூத்தாடல் நெல்லரிதல் மீன்பிடித்தல் உப்பு உண்டாக்குதல் அவற்றை விட்றல் போன்ற பல தொழிகள் செய்து தங்களுடைய வாழ்வதாரத்திற்கு நிரந்தரமான தொழில்முறைகளை வகுத்துக்கொண்டு வாழ்ந்தனர் என்பதை நற்றிணையில் உள்ள பாடல்கள் மூலம் புலவர்கள் திறன்பட கூறியுள்ளனர். குறிஞ்சி நில மக்கள் ஆதியில் வேட்டையாடுதலை தொழிலாக கொண்டிருந்தனர். யானை பன்றி முள்ளம்பன்றி ஆகியவற்றை வேட்டையாடிவந்துள்ளனர்.

**"வெண்கோடு கொண்டு வியல்அறை வைப்பும்**

**பச்சுன் கொண்டி வள்ளுகீர் முணக்கவும்"** *(நற் - 114)*

போன்ற பாடல்கள் மூலம் தொழில் முனைந்த விதத்தை அறியலாம்.

**திருமணம்**

திருமணம் என்பது ஒரு பெண்ணுக்கு ஒர் ஆணுக்கும் சமூகத்தால் அங்கீகரிக்கப்படும் உறவாகும். சங்க கால மக்கள் காதல் வாழ்க்கையில் திளைத்து மகிழ்ந்தனர். தலைவனும் தலைவியும் ஊரறியமால் மணம் செய்வது கொள்வது களவு மணம் ஆகும். உலகத்தார் அறியாத வகையில் பெரும்பாலும் உடன்போக்கில் சென்றனர். பிறகே ஊரார் அறிய வாழத் தொடங்கினர் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.

**"இன்பமும் பொருளும் அறமும் என்றாங்கு**

**அன்பொடு புணர்ந்த மருக்கின்**

**காமக் கூட்டம் காயும் காலை**

**மறையோர் தோந்து மன்றம் எட்டனுள்**

**இறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே:** *(தொல் பொருள் களவு 09)*

எனும் நூற்பா மூலம் விளக்கியுள்ளார்.

களவில் ஈடுபட்ட தலைவன் விரைவில் மணம்புரிந்து கொள்ளாமல் களவு ஒழுக்கத்தையை நீடிக்க விரும்புகிறான். இதனை அறிந்த தோழி தலைவியிடம் கடிந்துக்

கொண்டு தலைவனை விரைவில் ஊரார் பார்க்க மணம்முடிக்குமாறு அறிவுறுத்துகிறாள். சங்க அகப் பாடல்களில் தோழியின் செயல்பாடு முக்கியமானதும் முதன்மையாததும் ஆகும். அந்த வகையில் வரைவு கடாதல், பொதுமலர் வரைவு தலைவியை ஆற்றியிருந்தல் தலைவனை நெறிபடுத்தல் எனப் பல்வேறு சூழ்நிலையில் தோழியானவள் மிகவும் மதி நுட்பத்துடன் செயல்படுவாள்.

**அருங்கடி அன்னன் காவல் நீவிப்**

**பெருங்கண்ட இறந்து என்றும் போகிப்**

**பகலே பலருங் காண் வாய்விட்டு**

**……………………………..**

**வான்நோய் மாமலை நாடனைச்**

**சான்றோம் அன்மை என்றமை வாறகே"** *(நற் - 363)*

என்ற பாடல் மூலம் தலைவன் வேறு ஊரை சார்ந்தவன் என்பதை அறிய முடிகிறது. மேலும் குடியிலிருந்து மற்றொரு குடிக்கு திருமணம் செய்வர் என்பதையும் பாடல் வழி காணமுடிகிறது.

**தெய்வ நம்பிக்கை**

சங்க காலம் தொட்டு இன்றுவரை மக்களிடையே தெய்வநம்பிக்கை நிலவிவருகிறது. தத்தம் நிலத்திற்கேற்ப குலத்தெய்வ வழிபாட்டினை மேற்கொண்டிருந்தனர். குறிஞ்சி நில மக்களின் சமய நிகழ்வுகளைக் கூர்ந்து நோக்கும்போது அம்மக்களின் உளநிலையும் பண்பு நிலைமையும் வெளிப்படையாக அறியமுடிகிறது. தெய்வம் மலையில் உறைவதாக நம்பிக்கை அணங்கு குரும் பற்றிய நம்பிக்கை பேய் பற்றிய நம்பிக்கை கனவு பற்றி நம்பிக்கை போன்ற் பல்வேறு வகையான நம்பிக்கைகள் மக்களிடையே நிலவி வருகின்றது.

**"அணக்கொடு நின்றது மலைவரன் கொள்கெனக்**

**கடவுள் ஓங்கவரை பெண்டிர் வேட்டெழுந்து"** *(நற் - 366)*

**"போருடை வுருடையும் பாயா**

**குருடை அடுக்கத்த கொயுற்கு அருந்தழையே"** *(நற் - 359)*

போன்றவை நற்றினைப் பாடல்கள் மூலம் அறியமுடிகிறது.

**பண்டமாற்று முறை**

சங்க காலமக்கள் நத்தம் நிலப்பகுதியில் விளைந்தப் பொருட்களைக் கொண்டு மற்றொரு நாட்டிற்கு பண்டமாற்று முறையில் அல்லது பரிவர்த்தனை முறையில் வியாபாரம் செய்துவந்துள்ளன என்பதை,

**"நம்நாட்டு வினைந்த வெண்ணெய் தந்து**

**பிறநாட்டு உப்பின் கொள்ளை சாற்றி"** *(நற் - 183)*

என்ற பாடல் வரிகள் இதற்குச் சான்றாக அமைகின்றன.

**மன்னர்களின் வீரச் சிறப்பு**

நற்றிணைப் பாடல்கள் வரலாற்றில் மன்னர்களின் போர்சிறப்பு கொடைத்திறம் வீரச்சிறப்பு பலவற்றைக் காணமுடிகிறது.

**"மக்கள் நுதலிய அகத் திணையும்**

**சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறா"** *(தொல் அகம் - 27)*

என்பது தொல்காப்பியரின் அகத்திணை கோட்பாடு எனவே அகப்பாடல்களில் பெயர்கள் இடம் பெறுவது கிடையாது. ஆயினும் தலைவன் களவு வாழ்கை நீட்டிக்கும் போதும், தலைவன் புறத்தை ஒழுக்கத்தில் ஈடுபடும் போதும் தலைவன் தலைவியைக் காணமுடியாது நிலையிலும் தோழியின் வாயிலாக சூழ்நிலைகளை விளக்க வரலாற்றுச் செய்தியைப் பின்னணியாகக் கொண்டு புலவர்கள் விவரித்துள்ளனர்.

மேற்கூறிய அனைத்து செய்திகளின் மூலம் சங்ககால மக்களிடையே நிலவிய பண்பாட்டுக் கருப்பொருள் மிகத் தெளிவாக விளங்குகிறது. மேலும் அக்கால மக்கள் கொண்டிருந்த வழிபாட்டுமுறை, விருந்தோம்பல் முறை, உணவுமுறை, உறைவிடம் போன்ற செய்திகள் பரவும் நற்றிணை பாட்டின் வழி நமக்குத் தெரிய வருகிறது. நாமும் அந்நெறியைப் பின்பற்றி ஆரோக்கிய வாழ்வினை மேற்கொள்ள முயல்வோம்.

# புறநானூற்றில் வாழ்வியல் நீதிகள்

***ப.பிரியா,** *பி.ஏ,எம்.ஏ, ஆய்வியல் நிறைஞர், தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), எளையாம்பாளையம், திருச்செங்கோடு, நாமக்கல் 637 205.*

மொழி இனம் சமயம் போன்ற பிறவற்றால் வேறுபட்ட மக்கள் பல சேர்ந்து வாழும் அமைப்பே சமூகம் எனப்படும். குடும்பம், சமயம், இனம் போன்ற பல்வேறு அமைப்புகள் இதனுள் அடங்கும். மனிதனை பற்றி அறிந்துக் கொள்ள வேண்டும் என்றால் மக்கள் வாழ்க்கை முறையை தெரிந்துக் கொள்ள வேண்டும் இதனையே நாம் சமூகவியல் என்கிறோம் மக்கள் கூடி வாழும் அமைப்பிற்கு எவ்விதத்தில் நியதிகளையும், அறக்கொள்கைகளை ஏற்படுத்திக்கொள்கின்றனர் என்பதை அறிந்துக்கொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**நேர்மையான சமுதாய அமைப்பு**

நேர்மையான சமுதாய அமைப்பே மக்களிடத்தில் அமையப்பெற்றால் தான் மக்கள் இனிமையான நிறைவான வாழ்வு வாழ முடியும். உண்மையில் மனிதனை மனிதானாக்குவதோ மக்கள் சமுதாயம் ஆகும். சில கோட்பாடுகளையும் சில நியதிகளையும் அமைத்து முறைப்படி வாழ்வது ஆகும்.

சமூகம் எண்ணற்ற நோக்கங்களை கொண்டு அவற்றை பல்வேறு அமைப்பு வாயிலாக நிறைவேற்றும் கட்டமைப்பு ஆகும். அரசு தன் உயர் அதிகாரத்தால் மக்களை கட்டாயப்படுத்தியும் வற்புறுத்தியுமே எல்லாவறற்றையும் சாதித்துக்கொள்கிறது. ஆனால் மக்கள் தன் நோக்கத்தை மென்மையாகவே நிறைவேற்றிக்கொள்கின்றனர்.

**தனி மனிதன் ஒழுக்கம் (அறம்)**

தனி மனிதனின் ஒழுக்கமான வாழ்வு சமுதாய வாழ்வில் தான் நலம் பெற முடியும். ஒரு ஆணும், பெண்ணும் ஒழுக்க சிலர்களாய் வாழ்ந்து

மற்றவர்களுக்கு வழிக்காட்ட தகுதிப்பெற்றவர்களாக திகழ்வதுச் சூழ்நிலைகளை அமைத்து தருவது சமுதாயத்தின் கடமையாகும். அறம் என்பதை பண்டைய தமிழ் சான்றோர் ஒரு கொள்கையாகவோ, கோட்பாடாகவோ கருதாமால் அதனை வாழ்க்கை நெறியாகவே கருதி போற்றினார். ஒழுக்கநெறிக்குரிய விதிமுறைகளின் தொகுப்பாகவே அறம் கொள்ளப்பட்டது. ஒழுக்கம் தனி மனித அறத்தை சுட்டுவதாகவும் வழக்கமும் இராசநீதியும் சேர்ந்து சமுதாய அறத்தை சுட்டுவதாகவும் நாம் கூறலாம் என்பது க.த.திருநாவுக்கரசு அவர்களின் கருத்தாகும்.

தமிழர்கள் வாழ்வியல் நெறிகளை பின்பற்றுவதில் சிறந்த வரையறைகளை கொண்டிருந்தனர் மக்கள் சமுதாய ஒற்றுமையுடன் விளங்க வேண்டுமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒற்றுமை நிலவவேண்டும். இதனை பண்டைய தமிழ் சமதாயம் நன்கு உணர்ந்து இருந்தது. காதல் இருவர் கருத்தொருமித்த ஆதரவுபட்ட இன்பமே வாழ்வியல் சிறந்தது என அவர்கள் எண்ணினர்.

புறநானூற்றில் இல்லறவாழ்வுக்குரிய கருத்துக்கள் இல்லையெனினும் மக்கள் வாழ்க்கை பற்றி மிக சில செய்திகள் ஆங்காங்கே காணப்படுகின்றன. ஒவ்வொரு மனிதனும்

நாட்டின் தனிப்பட்ட சிறந்த அங்கமாக கருதப்பட்டான். அவன் நாட்டுக்கு ஆற்றவேண்டிய கடமைகள் வற்புறுத்தப்பட்டன.

சமுதாயத்தில் ஒவ்வொருவரும் ஆற்றவேண்டிய கடமைகள் பற்றி புறநானூறு ஈன்று புறம்தருதல் தாயின் கடமையே. சன்றோனாக்குதால் தந்தைக்குக் கடன், திருத்தமான வேல்வடித்து கொடுத்தால் கொல்லார்க்கு கடன் நல்ல போர் பயிற்சி அளித்தல் வேந்தர்க்கு கடன்.

**ஒளிறுவான் அருஞ்சமருக்கிக்**

**குளிறெறிந்து பெயர்தல் காளைக்கு கடன்**

பெற்றெடுப்பது மட்டுமே தாயின் கடமை எனக் கூறினாலும் வீரனை உருவாக்குவதிலும் அவளது பங்கு இருந்தது என்பதற்கு புறநானூற்று பாடல்கள் சான்றாகும்.

**தாயின் வீரம்**

ஆண்கள் மட்டுமின்றி பெண்களும் வீரஉணர்ச்சி பெற்றிருந்த காலம் புறநானூற்றுக் காலம். பெண்களுக்கு போரில் நேரடியாகக் கலந்துக்கொள்ளும் உரிமை அளிக்கப்படவில்லை எனினும் ஆணுக்கு நிகரான வீரம் அவர்களுக்கு இருந்தமையை காணமுடிகிறது. நின் மகள் யாங்குளன் என வினவியப் போக்கு புலிசேர்ந்து போனிய கல்லணை போல ஈன்ற வயிறு இது தோன்றுவன மாதோ போர்க்களம்தானே எனக்கூறி ஒரு மகனல்லது வேறு மகனில்லாத தாயும் அவனைச் சருமுலம் நோக்கிச் செல்லென வகுக்கும் பண்பினைக் காணமுடிகிறது.

**வீரத்தினால் வந்த காதல்**

கோப்பெருநற்கிள்ளி எனும் அரசனை பொருங்கோழி நாய்க்கன் மகள் நாக்கன்னையார் பாடியதாக மூன்று பாடல்கள் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளன. இப்பாடல்கள் வீரமிக்கவனையே விரும்பும் பெண்டிரின் மனநிலையை படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்தள்ளன. மகன் சிறந்த வீரனாக விளங்க வேண்டும் என்று என்னும் தாய் ஒரு வீரனையே தனக்கு கணவானாக ஏற்றியிருப்பாள் என்பதில் ஐயமில்லை கோப்பெருநர் கள்ளியைக் காதலித்த நக்கன்னையும் தன் காதலனின் வீரத்தை எண்ணி பெருமிதம் கொள்கிறாள்.

ஆமுர்மல்லான் என்பவனுடன் அமர் புரிந்தான் பெருநர் கிள்ளி அதனை கனைக் காலதியான நக்கன்னையார் சென்றார் அவை கூடியிருந்தால் அவனின் அடுத்தோல் தழுவ நாளினர் அவனுடையத்து வென்றயன்று என்று சிலரும் கூறினார். வென்றியென்று சிலரும் கூறினார்.

நீதியில் வென்றியாதலைக் கண்டார், பெருமகிழ்வு அடைந்தார். அக வாழ்வின் உரிய காதல் நெறியை மடடுமின்றி ஏற்றுக்கொண்ட மனப்பாங்கு இதனுள் புலனாகிறது

**இல்லறமே நல்லறம்**

புறநானூறு காட்டும் மக்கள் வாழ்வில் துறவற நெறியை வலியுறுத்தம் தன்மையை காண முடியவிலை. இல்லற நெறியில் வாழ்நத அறம் புரிந்த தறக்கம் எய்துவந்த சிறப்பான வாழ்க்கை நெறியாக போற்றப்பட்டது.

தவத்திற்கு ஐயம் போன்றது உலக வாழ்க்கையான இல்லறம் தவஞ்செய்தல் எல்லோருக்கும் ஆற்றாது ஆகலின் துறவறத்தைவிட இல்லறத்தாரையே செல்வம் விடாமல் சோந்திருக்கும் அ∴தின்றி வாழ்தலை வெறுத்தார்கால செல்வமும் சேராது. அவர் இன்புறுவதும் இவர் எனறிலேயே அழுத்தமாக நம்பிக்கை இருந்தது.

இல்லறத்தின கடமைகள் இன்தென்பதை விளக்குகிறான கண்ணகி. அதனை கீழ்கண்டவாறு காணலாம்.

**“அறவோர்க் களிந்தனும் அந்தணர் ஒம்பனும்**

**துறவோர்க் கெதிர்தலும் தெல்லேலர் சிறப்பின்**

**விருந்தெத்தி கோடலும் இழந்த என்னை”**

**விருந்தோம்பல்**

விருந்தோம்பல் என்பது அறநெறியின் மாறுபட்ட சிறந்த செயலாகும் அது இக்காலத்து விருந்தோம்பலை போனறதன்று இதனை விளக்கும் முறையில்.

**ஈதலின் வேறுப்பட்டது விருந்தோம்பல்**

**அதுவறியலர்க்கு வழங்குதல் அல்ல**

**புதியவர்க்குப்**

**புசிக்கத் தருதல் அயலார்க்குத் தரும் ஆதரவு**

**ஊண்டிச் சாலைகளும் தங்கும் விடுதிகளும்**

**இல்லாக் காலத்தில் இது ஒரு**

**அருமைப்பாடுடையது**

**அறம் என்றில் ஐயமில்லை.**

என்பார் டாக்டர் திரு முருகரத்தினம்.

இத்தகைய அறத்தை ஆணும் பெண்ணும் விரும்பிச் செய்தனர் என்பது புறநானூற்று அறியலாகும் உண்மை.

**கைம்மைநிலை**

கணவனை இழந்த மகளிர் கைம்மை மகளிர் என அழைக்கப்படுவர். பண்டையத் தமிழிலக்கியங்களில் இம்மகளிர் நிலை வாழ்க்கை முதலியன விரிவாக சுட்டப்படுகின்றன. ஆளில் பெண்டிர் பருத்திப் பெண்டிர் உயர்வற் பெண்டிர் என நற்றிணை, புறநானூறு ஆகிய நூல்களில் குறிக்கப்படுகின்றன. தொல்காப்பியம் இதனை “துபுதர நிலை தாபத நிலை” என்ற சொற்களால் குறிப்பிடுகின்றது. புறநானூறு ஆனந்த பையுள் கையறு நிலை தாபத நிலை முதுபாலை ஆகிய துறைகளின் வழி இச்செய்திகளை விளக்குகிறது.

**தீப்பாய்தல்**

கணவன் இறந்துப்பட அவன் மனைவி உயர் வாழ விரும்பாது தீப்பாய்தல், வரைபாய்தல் போன்றவற்றால் உயிரை மாய்த்துக்கொள்ளுதல் வழக்கமாக இருந்தது. தீப்பாய்ந்து உயிர் விடுதலை உடன்கட்டை ஏறுதல் என்று குறிப்பிடுதல் உண்டு. இவ்வாறு உடன்கட்டை ஏறிய பெண்ணை தெய்வம் என கருதி கல்நடுதலும் அக்கல்லை மகா அதிர்கல் என்று குறிப்பிடும் வழக்கமும் இருந்ததையே அறிய முடிகிறது.

**கைம்மை நோன்பு**

போரில் அதிக ஈடுபாடும் விருமப்பமும் கொண்ட காலம் புநுறானுற்றுக்காலம் போரின் பெயரால் எண்ணற்ற வீர இளைஞர்களை பலி கொடுத்தமையால் கணக்கற்ற பெண்களைக் கைம்மை நோன்பில் புகச்செய்தது.

இக்கைம்மை நோன்பு நோற்கும் பெண்கள் அறிவு மயங்கி அழகுமிக்க கூந்தலை கெய்து நோன்பு தொடங்கினர். புலன்களை அடக்கித்தங்களது இன்ப வாழ்வு காருதாது உணவு, தோற்றம் போன்றவற்றில் மாற்றம் ஏற்படுத்திக்கொண்டு வாழ்தல் அவர்களது வழக்கமாயிருந்தததை அறிய முடிகிறது.

மனித வாழ்வை நெறிப்படுத்தும் புறநானூற்றுப் பொன்மொழிகள்

- ஒவ்வொருவருக்கும் கடமை உண்டு.
- தாய்பாசத்தைக் காட்டிலும் நாட்டைக் காத்தலே சிறப்பு.
- வீரமுடையவனே விரும்புதல் வேண்டும்.
- வறுமையிலும் விருந்தோம்பல்.
- கணவனை இறந்தபின் உயிாவாழாத கற்பு.
- கைம்மை நோன்பினால் மேற்கொள்ளும் கட்டுபாடுகள்.
- ஆணுக்கு கற்பு சிறந்தது என அறிவுறுத்தல்.
- நீர்நிலைகளைப் பெருக்க வேண்டும்.
- உண்டிக் கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே.
- செல்வத்தால் அறனும் பொருளும் இன்பமும் ஆற்றுதல் வேண்டும்.
- அறம் ஆற்றாவிடில் குறைவடையவராய் பிறப்பர்.
- கொடியோரை ஒழித்தலும் நல்லோரைக் காத்தலும் வேண்டும்.
- உலகம் நிலையிலாதது, அறவினையே விழுத்துணையானது.
- வசை நீக்கி இசை பெறுதல் வேண்டும்.
- செல்வம் நிலையில்லாதது.
- துனக்கென வாழாது பிறர்க்காக வாழ வேண்டும்.
- கல்வியில் சிறப்பு
- நன்மக்கட் சிறப்பு
- செல்வத்துப் பயனே ஈதல்
- நல்லார் இணக்கம்
- யாதும் ஊரே யாவரும் கேளிர்
- நன்மையும் தீமையும் பிறர்தர வருவதில்லை.
- பெரியோரை வியத்தலும் சிறியோரை இகழ்தலும் கூடாது
- உயர்ந்த குறிச்கோளுடன் உயர்ந்தோராக விளங்குதல் வேண்டும்.
- நல்வினையினால் துறக்கமும் புகழும் கிடைக்கும்.

இத்தகைய நீதிகளைப் பெற்று நேர்மையாக வாழும் சமுதாய அமைப்பில்தான் மக்கள் இனஙகான முடியும். மக்களாய்ப் பிறந்தவர்கள் நம் சிந்தனையைச் செம்மையான வழியிலேயே செலுத்தி நன்மை தீமைகளை ஆய்ந்து அவற்றிலிருந்து நன்மையானவற்றை நாடி நலம் தரும் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதினால்தான் தனக்கும் மற்றவருக்கும் பெருந்தன்மையும் பேரின்பமும் ஏற்படுகிறது. இந்நோக்கத்துடன் சங்ககாலச் சான்றோர் பலரால் இயற்றப்பட்டவையே புறநானூறு பாடல்கள் இவை மக்கட் சமுதாயத்திற்குச் சிறந்த அறத்தினை வரையறுத்தும் வடிவமைத்தும் கொடுக்கின்றன என்று கூறுதல் சாலப் பொருந்தும்.

# நற்றினையில் தமிழர் பண்பாடு

*ப.விஜயலட்சுமி, *எம்.ஏ. பி.எட்., ஆய்வியல் நிறைஞர், தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) எளையாம்பாளையம், திருச்செங்கோடு, நாமக்கல் 637 205.*

வாழ்க்கை என்பது இயற்கையோடு இயைந்தது. இயற்கையின் இயல்பான வெளிபாடுகள் இவ்வுலக உயிர்கள், உயிர்கள் பரிணாமச் சிறப்புக்கொண்டது. மனித இனம், இம்மனித இனம் அறிவாலும் அன்பாலும் அமைத்துக் கொண்ட ஒரு கூட்டுறவு அமைப்பே மனித வாழ்க்கை. இவ்வாழ்க்கையின் இயற்கை வெளிபாடே இலக்கியம் ஆகும். இவ்வுலக்கியம் செயல்திறன், மனஉறுதி, புரிதல் திறன், முடிவெடுக்கும் திறன், நெகிழும் குணம், மதிப்பிடும் திறன் போன்ற உயர்ப்பண்புகளைச் சான்ற ஆதாராங்களோடு வெளிப்படுத்தி சமூகத்தின் வழிகாட்டியாய் நிற்கிறது இலக்கியம். எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான நற்றிணையில் தமிழர்களின் பண்பாடு குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

**உயிர்கள் மேல் இரக்கம்**

எல்லா உயிர்களிடமும் இரக்கம் காட்டுவது பண்டைய தமிழர்களின் பரம்பரைக் குணம் காரணமில்லாமல் எவ்வுயிர்க்கும் இன்னலிழைக்க மாட்டார்கள். சிற்றுயிர்களுக்குக்கூட தீங்கு செய்யமாட்டார்கள். இந்த உண்மை ஒரு நிகழ்ச்சி மூலம் விளக்கி காட்டுகிறது ஒரு பாடல்.

ஒரு தலைவன் தேரின் மேல் ஏறிக்கொண்டு வருகிறான். அத்தேர் கடற்கரையில் வழியே வந்து கொண்டுயிருக்கிறது. கடற்கரையிலே நண்டுகள் மேய்ந்துக் கொண்டு யிருக்கின்றன. தேரோட்டி வரும் பாகன் தேர்ச் சக்கரத்திலே அந்த நண்டுகள் அகப்பட்டு நசுங்காத படி கவனத்துடன் தேரை ஒட்டிக்கொண்டு வருகின்றான். இச்சமயத்திலே அவனுடைய செயலுக்கு உதவியாக நிலவும் தோன்றியது. இந்நிகழ்ச்சியின் வழியாகத் தமிழிர்களின் உயிர் கருணையை வெளிபடுத்துகிறது ஒரு பாட்டு.

**“புணரி பொருந பூமணல் அடைகரை**

**ஆழி மருங்கின் அலவல் ஓம்பி**

**வலவன் வள்வு அயர்ந்து ஊர**

**நிலவு விதிந்தன்றல் காணலானே”       (பாட்டு – 11)**

**துன்பம் களைத்தல்**

தமிழர்கள் பிறர் படும் துன்பத்தைக் கண்டால் பெறுக்கமாட்டார்கள் உடனே அவருக்கு உதவி செய்ய முந்துவர் இதுவே சிறந்த மனிதத்தன்மை ஆகும். இவ்வுண்மையைப் பண்டைய தமிழர்கள் அறிந்திருந்தனர். ஒரு மனிதனுடைய சிறந்த செல்வம் எது என்பதை ஒரு நற்றிணை பாட்டு எடுத்துக்காட்டுகிறது

**“நெடிய மொழிதலும் கடிய ஊறுதலும்**

**செல்வமென்று தம்செய் வினை பயனே**

**சான்றோர் செல்வம் என்பது, சோர்ந்தோர்**

**புன்கண் அஞ்சுன் பண்பின்**

**மென்கண் செல்வம் செல்வம்என்பதுவே”** *(பாட்டு 210)*

அதிகார தோரணையிலே பேசுவதும் விரைந்து சொல்வது செல்வமென்று அச்செய்யும் செயலில் நல்ல பயனையே செல்வம் என்று சாற்றுவார். தன்னை கண்டவர்களின் துன்பம் தன்னை கண்டவுடனேயே அஞ்சி ஓடும் படியான தன்மையுடன் இரக்கம் காட்டுவதாகிய செல்வமே சிறந்த அழியாத செல்வம் ஆகும்.

**பெண்ணின் பெருமை**

மானமுள்ள குலத்திலே பிறந்த பெண்கள் வீட்டுக் குறைகளைப் பிற அறிவதற்கு இடம் கொடுக்க மாட்டார்கள். வறுமையால் எவ்வளவுத்தான் வாடி வதங்கினாலும் பெருமையை விட்டுக்கொடுக்க மாட்டார்கள். உள்ளதைக் கொண்டு மகிழ்ச்சியடையவர்களையன்றி இரவர்ச் சோற்றுக்கு ஏங்கி நிற்க மாட்டார்கள் இதனை நற்றிணையில் ஒரு பாடலில் மிக அழகாக விளக்கி உள்ளனர்.

சிறந்த அறிவையும் அறநெறியையும் எங்கே கற்றுக்கொண்டர்களோ அவளைக் கொண்ட கணவனுடைய குடும்பம் வறுமை அடைந்துவிட்டது என்பதை அறிந்து அக்குடும்பத்திற்கு அவள் தந்தை அனுப்பி வைத்த உணவுப் பொருளைக்கூட பெரிதாகக் கருதமட்டாள்.

**“அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்நதலை சொல்**

**கொண்ட கொடுதல் குடிவறன் உற்றெனக்**

**கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளன”** *(பாட்டு – 11)*

அதேபோல இவ்வாழ்க்கை என்ற அதிகாரத்தில் பெண்மையால் குடும்பம் பெறும் பெருமையை திருவள்ளுவர் மிக அழகாக தம் குறளால் வெளிப்படுத்தியுள்ளார்.

**ஆற்றின் ஒழுக்கிஅ றன் இழுக்க இல்வாழ்க்கை**

**நேறப்பாரின் நோண்மை உடைந்து”** (48)

இக்குறளில் பிறரை நல்வழியில் வாழச் செய்து தானும் அறம் தவறாமல் வாழ்பவள’ வாழ்க்கை குடும்பவாழ்வு, துறவ வாழ்வைவிடச் சிறந்தாகும் என்ற வகையில் பெண்களின் மேண்மையினைப் பெருமையாக உணர்த்துகிறார்.

**நாணமும் கற்பும்**

பண்டைக் காலத்தில் நாணமும் கற்பும் பெண்களுக்கு பேரணிகலன்களாக கருதப்பட்டது. கணவனை பிரிந்து ஒரு தனி இடத்திலே இருந்து வருந்தினாலும் சரி, தனது அருமையான உயிரோ போவதாயினும் சரி, சிறந்த ஆபாரணங்களை அணிந்த கற்புடைய மகள் தன் துன்பத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். குளிர்ந்த நீர்த்துறையை உடைய தலைவன் நாணமடையும் படி பகைவரால் இகழப்படும் பழி அவன் மீது அமரும்.

**‘துறந்த ஓர் தேஎத்து இருந்து நனிவருந்தி**

**அருயிர் அழிவதாயினும், நேர் இலை**

**கரத்தல் வேண்டு பால்மற்றே”** *(பாடல் 182)*

என்ற பாடல் உணர்த்துகின்றது.

**“உயிரினும் சறிந்தன்று நானே, நாயினும்**

**செயிர்தீர் காட்சி கற்புச் சிறந்தன்று எனந்**

**தொல்லோர் சிளவி”**

என்று தொல்காப்பியம் வலியுறுத்துகிறது. இதனால் இக்கருத்து மிக பழமையானது என்பதை அறியலாம். நாணம் என்பது மகளிர்க்கு உயிரைவிடவும் சிறந்தது அந்நாணத்திலும் சிறந்தது அவர்தம் கற்புடைமை என்பதை நற்றிணை காட்டுகிறது.

**ஆண்கள் கற்பு**

பண்டைத் தமிழர்கள் பலதார மண புரிந்து வந்தனர். அவர்கள் பல மனைவியர்களை மணந்துக் கொள்ளுவதோடு மட்டும் நிற்கவில்லை செல்வம் உடையவர்களும் சிறந்த வீரர்களும் பரத்தையர்களுடனும் சேர்ந்து வாழ்ந்தனர். இதற்காகவே பரத்தையர் சேரி என்ற இடங்களிலும் இருந்தனர்.

கணவன் கணிகையர் வீட்டுக்குச் சென்று வந்ததை அறிந்தால் காதலி வருந்துவாள் ஊடல் கொள்வாள் இச்செய்தி மருதத்திணை பாடல்களிலே கூறப்படுகின்றன. ஆண்களுக்கு இப்படித் தவறுச்செய்யும் உரிமை இருந்த காலத்தில் கூட அவர்களிலே பலர் கட்டின மனைவிமார்களிடம் காதலும் கற்பும் உடையவர்களவே நடந்துக் கொண்டனர். என் காதலியை என் உள்ளத்தை விட்டு பிரிக்க முடியாது. காற்று மோதியடித்தாலும் சரி கடுமையான இடி இடித்தாலும் சரி இன்னும் எண்ணற்ற இடையூறுகள் நேர்ந்தாலும் சரி இந்த பெரிய நிலமே கிடுகிடுடென்று நடுங்கினாலும் சரிதான் மிகவும் அழகிய தோற்றத்தை உடையவன் அழியாத இயற்கை வனப்புடைய பதுமை போன்றவன். என் உள்ளத்தை விட்டு போய்விட மாட்டாள் என்று நிலைத்திருப்பாள்.

**“கால் பொழுது இடிப்பினும் கதழ் உரை சிதறினும்**

**உகும் உடன்று எறியினும் ஊறுபல தோன்றினும்**

**பொதிகம் கிளரினும் திருநல உருவின்**

**மாயா இயற்கைப் மாவைபின்**

**மோதல் ஒல்லாள் என் நெஞ்சத் தானே”**

**நட்பு**

வாழ்வியல் நெறிகளுள், உயிருடன் உயிர் கலந்து ஒருயிராய் ஒன்றிய தன்மைதாய்த் திகழ்வது நட்டு நல்லநட்பில் வெறுப்பு தலைக்காட்டுவதில்லை இருதலை பள்ளிர்க்கு ஒரு உயிர் அமைந்தாற் போன்று ஈருடல் ஓர் உயிராய் விளங்கும் தன்மையிர் நட்பினர்.

**“பெரியோர் நாடி நட்பின் அல்லது**

**நட்டு நாடார் தம் ஓட்டியோர் திறத்தை”**

என்னும் அடிகள் உயர்ந்த நட்பின் திறம் பேசுபவை ஒருவரிடத்து நட்பு செய்யும் காலத்து அவர்களுடைய இயல்புகளை நன்கு ஆராய்ந்து நட்பு கொண்ட பின் ஆரய்ச்சி செய்வது என்பது பொருந்தாத செயலாகும் என்பவை மேற்கண்ட நட்பின் திறத்தை பலப்படுத்துவன.

**நீதி மொழிகள்**

வயதேறியவர்கள் வாலிபராகலாம் முதியோர் இளைஞர்ராகலாம் குழவி கிளவியகலாம் இதற்கு மருந்து உண்டு காய கற்பம் உண்டு என்று இன்றும் நம்புகின்றனர். முதியவர்கள் இளமையடைய முடியாது. வாழ்நாள் இவ்வளவு தான் என்று சோதிடத்தினாலும் அறிய முடியாது என்ற உண்மையை கூறுக்கின்றது ஒரு செய்யுள். முதியவர்கள் எவ்வளவு வருந்தி முயன்றாலும் மீண்டும் இளமை பருவத்தை அடைய மட்டார்கள் வாழ்நாளில் வகையை இவ்வளவு நாள்தான் என்று அறிந்து கூறுகின்றவர்களும் இல்லை.

“முதிந்தோர் இளமையழிந்தும் எய்தார்

வாழ்நாள் வகையளவு அறிஞரும் இல்லை” *(பாட்டு 314)*

**பழக்க வழக்கங்கள்**

பண்டை தமிழர்களின் பழக்க வழக்கங்கள் பல நற்றினை பாடல்களிலே காணப்படுகின்றன. தை மாத்திலே குளிர்ந்த நீர் நிறைந்த குளங்களிலே பெண்கள் நீராடுவார்கள்.

**“தைத் திங்கள் தண்கையம் படியும்**

**பெருந்தோள் குறுமகள்”**

பெண்கள் தாம் விரும்பு ஆடவனை கணவனாக பெறுவதற்காகத் தை நோன்பு நோற்பார்கள். பிள்ளைகளுக்குப் பாட்டன் பெயரை வைப்பது பண்டைத் தமிழர்களின் வழக்கம் ஆகும். தன் மகள் கள்ளக் காதலில் ஈ,டுப்பட்டு அன்னை அறிந்தல் கடுஞ்சினம் கொள்வாள் அவளை கோலால் அடித்து கண்டிப்பாள். மக்கள் மேல் தெய்வ ஆவேசம் வந்து ஆடுவது உண்டு. இதற்கே வெறியாட்டு என்று பெயர் பல்லி சொல்லுக்கு பலன் உண்டு என்ற நம்பிக்கை பழந்தமிழர்களிடம் இருந்தது.

பண்டைத் தமிழரின் வாழ்க்கை குறிக்கோள் கொண்ட வாழ்க்கை முறையாக இருந்துயுள்ளது. அவர்கள் தங்கள் வாழ்வியல் நிலைமைக்கு ஏற்ப தங்களுடைய வாழ்க்கையை நடத்தியுள்ளனர். மேலும் பண்டைத்தமிழர்களின் பண்பாட்டைக் காண நற்றிணை பாடல்கள் பேருயுதவி புரிகின்றது.

# நாட்டுப்புறப் பாடல்களில் உவமைகள்

***மோ.கோமதி,** *எம்.ஏ., பி.எட். ஆய்வியல் நிறைஞர், தமிழ்த்துறை, விவேகனாந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), எளையாம்பாளையம், திருச்செங்கோடு, நாமக்கல் 637 205.*

நாட்டுப்புறப்பாடல்கள் என்பது படிப்பறிவு இல்லாத பாமரமக்களால் பாடப்பட்டு அவர்களாலே பாதுகாக்கப்பட்டு வருவனவாகும். மனித மனத்தின் இயல்பான உணர்ச்சிகளின் அடிப்படையில் தோன்றும் வாய்மொழிப்பாடலின் தோற்றுவாய் மனித உணர்ச்சியின் முகிழ்ப்பேயாகும். தமிழ்நாடு வாய்மொழிப் பாடல்களின் களஞ்சியமாக விளங்குகிறது.காலம் காலமாக இக் களஞ்சியத்தை புதுப்புதுப் பாடல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. நாட்டுப்புறப் பாடல்களில் குழந்தைப்பாடல்கள், பக்திப் பாடல்கள், உணர்ச்சிப் பாடல்கள், ஒப்பாரிப்பாடல்கள், பன்மலர்ப் பாடல்கள் என பல வகை உண்டு சொல், தொடை அழகு ஆகியன காணப்படும்

**உவமைப் பொருள்**

நாட்டுப்புற மக்களின் உணர்ச்சியில் பாடப்படும் பாடல்களில் பல்வேறு உவமைகள் காணப்படுகின்றன உவமை என்பது ஒரு பொருளோடு வேறொரு பொருளை ஒப்புமைப் படுத்திக் கூறுவதாகும். உவமையணி நான்கு உறுபபுகளைக் கொண்டது

- உவமம்
- உவமை உருபு
- உவமைக்கும் பொருக்கும் அமைந்த பொதுத் தன்மை
- பொருள்

'பவளம் போல சிவந்தவாய்' என்னும் தொடரில் 'பவளம்' என்பது உவமம் என்ற உறுப்பாகவும், 'போல' என்பது உவமை உருபு என்ற உறுப்பாகவும், 'சிவந்த' என்பது உவமைக்கும் பொருளுக்கும் அமைந்த பொதுத் தன்மை என்ற உறுப்பாகவும் 'வாய்' என்பது பொருள் என்ற உறுப்பாகவும் விளங்குகிறத.

'உவமை' என்பது 'உவமானம்' எனவும். 'பொருள்' என்பது 'உவமேயம்' எனவும் வழங்கப்படும்.

'உவமை' தெளிவினை ஏற்படுத்தும் குணமுடையது. அன்றாட வாழ்க்கையில் பிள்ளைகளுக்கு இட்லி ஊட்டும் தாய்மார்கள் 'இட்லி பூப்போன்று இருக்கிற து.' 'இன்னும் ஒன்று சாப்பிடு' என்று கூறுவதைக் காணலாம். இங்கே 'பூ' இட்லிக்கு உவமையாகக் கூறப்படுகிறது. இது போன்ற தந்தை குழந்தையை அடித்துவிட்டால் மிகவும் இரக்கப்பட்டு தாய் 'கொழுக்கட்டை' போல் வீங்கி விட்டதே எனக் கூறுவதைக் காணலாம். பாமரமக்களும் தங்களுடைய வாழ்க்கையில் அன்றாடம் உவமைகளைச் சரளமாகப் பயன்படுத்துவதிலிருநது உவமை புலவர்களுக்கு மட்டுந்தான் சொந்தம் என்ற நிலை மாறி உலகிலுள்ளோர் யாவருக்கும் பொதுவான ஒன்று என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

**தாலாட்டுப் பாடலில் உவமை**

யாரடித்தார்? ஏன் அழுகிறாய்? எனத் தாயானவள் குழந்தையைப் பார்த்துக் கூறும்போது உவமை நயம் தோன்றப்படுவதேக் கீழே காணலாம்.

**'விளக்கிலிட்ட வெண்ணெயைப் போல**

**வேந்துருகி நிற்கையிலே**

**கலத்திலிட்ட சோறது போல**

**கண் கலக்கந் தீர்ந்தாயோ?'**

குழந்தை கண் கலங்கி அழுது நிற்பது. விளக்கில் போட்ட வெண்ணெய் உருகி நிற்பதற்கு உவமை கூறப்பட்டுள்ளது. அதன்பின் அக்குழந்தை அழுவதை நிறுத்திக் கண் கலக்கம் தீர்ந்து நிற்ப்பதைப் பாத்திரத்தில் சோற்றைப் போட்டால் எத்தனை மகிழ்ச்சி தருமோ அது போன்று குழந்தை காணப்பட்டதாக உவமை கூறப்பட்டிருப்பது பொருத்தமாக உள்ளது.

**நாகப்பாம்பை வர்ணித்தல்**

நாட்டுப்புறப் பாடல் ஒன்றில் ஒரு நாகத்தின் 'வால்' பிரம்புக்கும் 'படம்' சளகிற்கும் கண்' குண்டுமணி விதைக்கும் 'பல்' பச்சை அரிசிக்கும் உவமை கூறப்பட்டுள்ளதைக் காணலாம் '

**'மணி பிரம்பு போலே**

**பால் அழகு நாகரே**

**சிறு சளகு போலே**

**படமெடுக்கும் நாகரே**

**குண்டு முத்துப் போலே**

**கண்ணழகு நாகரே**

**பச்சரிசி போலே**

**பல்லழகு நாகரே'**

**வறுமையை வர்ணித்தல்**

சோழ நாடு வளமைக்குப் பெயர் பெற்றது. வறுமைக்கு அங்கு இடமே இல்லை சோறுடைத்து என்று கூறினால் அது சோழ நாட்டையே குறிக்கும். அப்படிப்பட்ட நாட்டில் மழையின்றிப் பட்டினி கிடந்து வாடிப் போகும் நிலையைக் குறித்து ஒரு பாடல் இவ்வாறு கூறகிறது

**'சருகு போல் உலர்ந்தனரே**

**தனிச் சோழன் பட்டணத்தில்'**

மரத்திலிருந்து உதிரும் சருகு மக்களின் வறுமையை விளக்க வந்திருப்பது மிகவும் பொருத்தமுடையாதாக அமைந்துள்ளது

**திருமண வாழ்த்து**

திருமணத்தின போது புதுமணத் தம்பதிகளை வாழ்ததுவாக ஒரு பாடல் வருகிறது. அதில் உவமைகள் அடுக்கடுக்காகக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

**'ஆல் போல் தழைத்து**

**அறுகு போல் வேரோடி**

மூங்கில் போல் சுற்றும்

முசியாமல் வாழ்ந்திடுவீர்'

மனித மனத்தின் இயல்பான உணர்வுகளின் அடிப்படையில் பாடல்கள் எழுகின்றன. இவ்வுணர்ச்சிப் பாடல்களில் காதல் பாட்டுக்களில் உவமைகள் அதிக எண்ணிக்கையில் கையாளப்பட்டு வருவதைக் காண்கிறோம். தாலாட்டுப் பாடல்களில் ஒருசில உவமைகள் எடுத்தாளப்பட்டுள்ளன. இந்த நாட்டுப்புறப் பாடல்களில் கையாளப்பட்டிருக்கும் உவமைகள் பொருத்தமுடையாதாகவும் பிறருக்கு எளிதில் பொருளை விளங்க வைப்பதாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை நாட்டு மக்களின் அறிவுத் திறனை வெளிப்படுத்துகின்றன.

**துணை நூல்கள்**


1. அழகப்பன் - ஆறு நாட்டுப்புறப் பாடல்கள் திறனாய்வு கழக வெளியீடு, சென்னை 1980
2. தமிழண்ணல் , தாலாட்ட , செல்வி பதிப்பகம், காரைக்குடி 1991.
3. பெருமாள் அ நா., நாட்டுப்புறவியல் சிந்தனைகளள், ஐந்திணைப் பதிப்பகம் சென்னை, 1987.
4. முருகானந்தம் - ச., நாட்டுப்புறப்பாடல்கள் தமிழ்ப் புத்தகாலயம் சென்னை,1987
5. வாழ்வியற் களஞ்சியம தொகுதி ஐந்து, தமிழ்ப பல்கலைக் கழகம் தஞ்சவூறீர் 1987.

# சித்தர் பாடல்களில் சமுதாய சிந்தனைகள்

***ஜெ.சி.சுதா,** *எம். ஏ. பி. எட், ஆய்வியல் நிறைஞர், தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), எளையாம்பாளையம், திருச்செங்கோடு, நாமக்கல் 637 205.*

சித்தர்கள் மக்களின் சமுதாய வாழ்வில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள். சித்தர்களுடைய சிந்தனைகள் பெரும்பாலும் பாமரர்களுக்காக தாழ்த்தப்பட்டவர்களுக்காக பொருளாதரத்தில் நசுக்கப்பட்டவர்களுக்காக எல்லா நிலையிலும் ஒடுக்கப்பட்டுக் கடை மட்டத்தின் வாழ்க்கையின் பெரும்பகுதி அவலங்களையே சந்திக்கும் அப்பாவி மக்களை உயர்த்தும் பொருட்டாகவே சித்தர் பாடல்கள் காணப்படுகின்றன.

**சமய வேதமறுப்புச் சிந்தனைகள்**

சமயம் என்பது வாழ்க்கை முறை அதாவது மனிதனை நெறிப்படுத்தி அவன் உள்ளத்தைப் பக்குவப்படுத்தும் கருவியாகச் சமயம் திகழ்கின்றது. குறை நீக்கத்திற்கும் நிறை நலத்திற்கும் சமயம் இன்றியமையாதது ஆகும்.

சமயங்கள் அனைத்தின் சாரம் இறைவுணர்வுதான் இறையுணர்வினை மட்டும் கருத்திற்கொண்டால் சமயங்களிடையே வேறுபாடியில்லை, மாறுபாடில்லை சாரமில்லாச் சடங்குகளை எடுத்துக்கொண்டு சமயங்களிடையே வேற்றுமைகள் வளர்க்கப்பட்டன, இன்னும் வளர்க்கப்படுகின்றன.

**‘சமயமெல்லாஞ் சக்தியுண்டு சிவமுமுண்டு**
**சண்டாளர் விரித்தல்லோ தள்ளினார்கள்**
**சமயமெல்லாம் வேதாந்தசித் தாந்தமுண்டு**
**சாதகத்தைப் பாராமற் றயங்கினார்கள்**
**சமயமெல்லாம் நாதமுண்டு விந்துமுண்டு**
**காக்கமாற் கெடடார்க் ளுலகதோர்கள்**
**சமயமெல்லாம் அம்பட்டு அதைரமாம் ஞானமுண்டு**
**தாயைவிட்ட பாவத்தால தவறிப்போச்சே”**

என்ற சட்டை முனியாரின் பாடலில் சமய பொதுமையும் உண்மையும் பேசப்படுதல் குறிப்பிடத்தக்கது. வேதாந்தம் சாத்திரம் என்பனவற்றில் கூறப்படும் சமயங்களைப் பொய்கள் எனத் தள்ளுங்கள் இன்பத்தினாலும் துன்பத்தினாலும் மாறுப்படாமல் விரும்பு வெறுப்பு முதலான அனைத்தையும் ‘களை’ என்று ஒதுக்கி இவ்வுலகில் இருப்பதுவே சமயம் எனறு உண்மையான சமயத்திற்குரிய இலக்கணத்தை வரையறுப்பர் சட்டைமுனி.

**சிலை வழிபாட்டு மறுப்புச் சிந்தனைகள்**

சித்தர்கள் பலரும் உருவ வணக்கத்தை ஒத்துக் கொள்ளவில்லை. அதை மூடநம்பிக்கை என்றே மொழிகின்றனர். இறைவனைக் கற்சிலையில் கண்டு மகிழ்வர் மக்கள்

சிறந்த மெய்ப்பொருளை அழிவிலா ஒப்பற்ற மாமணியைக் கல்லில் காண முற்படுவது அறிவின் ஏழ்மையையுணர்த்தும் ஒவ்வொரு சிலையும் கல்லால் ஆனதுதான் ஆயினும் அவற்றை வெவ்வேறு பெயர்களில் அழைத்து மக்களைக் கண்டு வருந்துகின்ற சிவவாக்கியர்.

**‘பண்ணிவைத்த கல்லையும் பழம்பொருள் தென்றுநீர்**

**எண்ணமுற்று மென்னபே ருரைக்கிறீக் ரேழைகாள்”**

நட்டு வைத்த கற்சிலையைத் தெய்வ மென்ற நினைத்து அதற்குப் பலவகையான பூமாலைகளைச் சாற்றிவிட்டு அதைச் சுற்றிச் சுற்றிறச் வருகின்றனர் மொண மொண என்று ஏதொ மந்திரத்தைச் சொல்லுகின்றனர். இது அறியாதார் செயல் என்பதே சிவ வாக்கியர் கருத்து.

**நிலையாமைச் சிநதனைகள்**

**‘பத்தும் புகத்து பிறந்து வளர்ந்து பட்டாடை சுற்றி**

**முத்தும் பவளமும் பூண்டோடி ஆடி முடிந்த பின்பு**

**செத்துக் கிடக்கும் பிணத்தருகே இனிச் சாம்பிணங்கள்**

**கத்தும் கணக்கென்ன காண்’**

எனப் பாரனைத்தும் பொய் எனப் பார்த்த பட்டினத்தடிகளும் பாடிப் போந்தார் இப்படியாக சித்தர்கள் பலரும் உடல் நிலையாமை உலகம் நிலையாமை பற்றி நன்கு வலியுத்தித் தத்தம் பாடல்களில் பாடியருளியுள்ளார்கள்.

‘இந்த உடம்பை விடடு உயிர் பிரிந்தவுடன் உடனே உடலைச் சுற்றத்தார் அனைவரும் சுடுகாட்டுக்கு கொண்டு போய் சுட்டு விடப் போகிறார்கள். பல நாள் கூடி எடுத்த இந்த சரீரம் அனைத்தையும் ஒரு நாள் மண் திண்ணப் போகிறது. ஆக. இருப்பது என்னவோ, பொய் இறப்பது என்பதோ எண்மை அதனால் யாருக்கும் நீ தீங்கினை என்னாதே மனிதனின் வாழ்க்கை நிலையானது அல்ல மனித உயிர் உடம்பு நிலையானது அல்ல எனற பாடுகிறார் பட்டினத்தடிகள்

**‘நீரின்மேற் குழிழியிக் காயம் - இது**

**நில்லாது போ்விடும் நியறி மாயம்**

**பார்மீதில் மெத்தவும் நேயம்- கற்றும்**

**பற்றா திருந்திடப் பண் முபாயம்’ (கடு வெளி சித்தர்)**

என்னும் கடுவெளி சித்தர் பாடலில் நிலையாமை நெறி காட்டப்படுதல் காணலாம்.

**‘நீரில் எழும் நீர்குமிழி நிலைகெடல் போல்**

**நில்லாது உடல் நீங்கிவிடும்**’.

என்று பாம்பாட்டி சித்தரும் நிலையாமை பற்றி பாடியுள்ளார்.

**வாழ்வியல் சிந்தனைகள் :-**

1. காமம் ஒவ்வாமை
2. கள்ளுண்ணாமை
3. கோபம்
4. ஆசை
5. கொலை செய்யாதே ஊன் உண்ணாதே
6. கல்லாமை

**காமம் கொள்ளமை**

கள்ளைக் காட்டிலும் நினைத்தாலே கண்டாலே கேட்டாலே மதியை மயக்கும் கள் ஒன்று உண்டு. காமம் அறிவை மயங்கச் செய்வது உடலையும் பொருளையும் ஒரு சேரப் போக்கிப் பின்னே நிலைகுலையச் செய்யும் தன்மை வாய்ந்தது. இதை,

**'வெயில் கண்ட மஞ்சள் போன்ற மாதர் அழகை**

**விரும்பியே மேல்விழுந்து மேவு மாந்தர்**

**ஒயில்கண்ட இலவுகாத்த ஓடும் கிளிபோல**

**உடல் போனால் ஒடுவாரென்று ஆடுபாம்பே'**

பாம்பாட்டி சித்தரும் மக்கள் தாம் முன் கொண்டு அலைந்துதிரியும் நிலையை எடுத்துக் கூறுகினறார். மக்கள் பெண் ஆசையின் காரணமாகக் காமம் கொள்ளக் கூடாது என்று அறிவுறுத்த எண்ணியவர்கள் சித்தர்கள் .

**கள்ளுண்ணாமை**

சமுதாயத்தில் புரையோடிப்போன தீ வழக்கங்கள் சில என்றும் இருப்பன அவற்றை கடித்துரைக்கவும் நல்வழிப்படுத்தவும் சித்தர்கள் முயனறுள்ளனா்.

திருமூலா் குடியைக் கெடுக்கும் கொடுவிடமாகக் கள்ளினைக் கருதுகின்றார். கள்ளுண்போர் மாக்களளினம் இழித்தோராவர்.

**'வெறிகாட்டி மயற்கியே கள்குடி யாரே' (கடுவெளி சித்தர்)**

**கோபம் :-**

கோபம் மனிதனுடைய அழிவுக்கு விததாக இருக்கிறது. அது நமக்கு கெடுதியைத் தரும். அது பிறருக்கும் தீமையைத் தரும். கோபம் நம் உள்ளத்தில் குடி கொண்டிருககும் வரையிலும் நாம் எந்த காரியத்திலும் வெற்றி காண முடியாது.

**'சினம் என்னும் பாம்பிறந்தால்**

**தான்டவக் கோனே ! – யாவும்**

**சித்தி என்றே நினையைடா**

**தாண்டவக் கோனே' (இடைக்காட்டுச்சித்தர்)**

**ஆசை :-**

**'ஆசை யென்னும் பசுமாளின்**

**தாண்டவக் கோனே!**

**அண்டம் எல்லாம் கண்டறிவாய்**

**தாண்டவக் கோனே' (கொங்கனச் சித்தர் )**

ஆசை மனிதனின் துனபங்கள் பலவற்றிற்குக் காரணம் ஆசை என்பது அடங்காத பசு. அந்தப் பசுவின் அடங்காத்தன்மை அழிய வேண்டும் ஆசை அளவுக்குள் எல்லைக்குள் அடக்கி விட வேண்டும். இதைச் செய்துவிட்டால் இந்த உலகில் உள்ள உண்மைகள் முழுவதையும் கண்டறிய முடியும்.

**கொலை செய்யாதே உண் உண்ணாதே**

**'மோகமடன் பொய் களவு கொலை செய்யாதே'** ***(அகத்தியர்)***

**‘பொல்லாக் கொலை களவுகள் செய்யாதே’** *(கொங்கனர்)*

**‘அஞ்ச உயிர் மடி யாதே’** *(கடுவெளிசித்தர்)மூகம்*

பிறர் அஞ்சும்படி உயிர் கொலை செய்யாதே என்று எச்சிரிக்கின்றான்.

**கல்லாமை**

**‘படிப்பதினால் அறிவு பெற்றோர்**

**ஆயிரம் உண்டு**

**பாடம் படிக்காத மேதைகளும்**

**பாரினில் உண்டு’**

கல்லாமை ஒரு குணக்கேடான செயலாகும் என்று திருமூலர் பாடல்களில் நாம் காணலாம்.

இன்றைய நிலையில் சித்தர்களின் சிந்தனைகள் மிகமிக வேண்டியவை காரணம், இன்றைய சமுதாயம் எப்படியோ வாழ்ந்து எங்கோ செல்கிறது இதில் இறைநலம் ஆன்மீகப் பக்குவம் வாழ்வியல் சிந்தனைகள் மிக மிக குறைவு எனவே சித்தர்கள் பாடல்கள் மூலம் தெளிவாக கூறிவைத்துள்ளார்கள் இதை நம் படித்து பயன் பெறுவோம்.

# பாரதிதாசன் படைப்புகளில் தமிழுணர்வு

***முனைவர் அரங்க.பாரி, பேராசிரியர், தமிழியல்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்** *608002.*

**ஆய்வுச்சுருக்கம்**

*முன்னுரை – தமிழின்தொன்மை – தமிழின்நிலைமை – தமிழரின்கடமை – முடிவுரை – தொகுப்புரை – துணைநின்ற நூல்கள்.*

**முன்னுரை**

*இருபதாம் நூற்றாண்டில் தமிழ்க்கவிதை மறுமலர்ச்சிக்கு வித்திட்ட இருபெரும் கவிஞர்கள் பாரதியும், பாரதிதாசனும் ஆவர். பாரதியின் கவிதைகள் நாட்டுப்பற்றினை ஊட்டியது. பாரதிதாசனின் கவிதைகள் மொழிப்பற்றினை ஊட்டியது.*

*அவ்வகையில், பாரதிதாசனுக்கு உயிர், உடல், உணர்வு, செயல் அனைத்தும் தமிழே. இத்தமிழுணர்வு அவரது படைப்புகளில் பலவற்றிலும் பின்னிப்பிணைந்திருப்பதை இக்கட்டுரையில் காண்போம்.*

**தமிழின்தொன்மை**

*உலகின் முதன் மொழி தமிழ் என்ற கருத்தை வலியுறுத்துகிறார் பாவேந்தர். மனித வாழ்வுடன் முதலில் தோன்றியது தமிழ். பழந்தமிழ் மக்கள் இயற்கையிலிருந்தே தமிழைப்படைத்தனர். இயற்கையில் தழிழைக் காணும் கவிஞரின் தமிழ்ப்பற்று சிறப்புற்று நிற்கிறது. பறவை, விலங்கு, வண்டு இசைத்ததைத் தழுவி இசைத்ததால் இசைத்தமிழும், இன்பம் எய்திக்குதித்த நிலையிலிருந்து கூத்துத்தமிழும் தோன்றின எனப் பாவேந்தர் பகர்வார்.*

***புனல்சூழ்ந்து வடிந்து போன***
***நிலத்திலே "புதிய நாளை"***
***மனிதப்பைங் கூழ்மு ளைத்தே***
***வகுத்தது! மனித வாழ்வை,***
***இனியநற் றமிழே நீதான்***
***எழுப்பினை! தமிழன் கண்ட***
***கனவுதான், இந்நாள் வையக்***
***கவின்வாழ்வாய் மலர்ந்த தன்றோ?***
***பழந்தமிழ் மக்கள் அந்நாள்***
***பறவைகள், விலங்கு, வண்டு***
***தழைமூங்கில் இசைத்ததைத், தாம்***
***தழுவியே இசைத்த தாலே***
***எழும்இசைத் தமிழே! இன்பம்***
***எய்தியே குதித்த தாலே***
***விழியுண்ணப் பிறந்த கூத்துத்***
***தமிழே! என் வியப்பின் வைப்பே!*** ***(அழகின்சிரிப்பு, ப – 446)***

*எனக்கூறுகிறார்.*

இயற்றமிழையும் இயற்கையில் காண்கிறார். காக்கை“கா”,“கா”என்று தன்னைக் காப்பாற்றச் சொல்கிறது. கருமுகில்“கடமடா”என இடிக்கும்போது தன்கடமையை உரைக்கிறது. கிள்ளை “அக்கா” என்று அழைக்க, அதைக்கேட்ட பூனை “ஞாம்” “ஞாம்” என்கிறது. நாம்காக்கின்றோம் என்று உணர்த்துகிறதாம். இதைக் கேட்ட கழுதை ”ஏ” என இகழ்ச்சியாக கடிந்து கூறுகிறது.

“கூ”எனவையத்தின் பெயரைக்கூறிக் குயில் கூவுகிறது. நாவினிக்கநாயானது “வாழ்“ “வாழ்” என்று வாழ்த்துகிறது. வேந்தன் பெயரைக்கூறிச்சேவல் “கோ” எனக்கூவுகிறது. காற்றோ “ஆம்” என்று பாராட்டுகிறது. இதனை,

***காக்கை "கா" என்றுதனைக்***
***காப்பாற்றச் சொல்லும்!***
***ஒரு கருமு கில்தான்,***

***நோக்கியே "கடமடா"***
***என்றேதன் கடனுரைக்கும்!***
***நுண்கண் கிள்ளை***

***வாய்க்கும்வகை 'அக்கா' என்***
***றழைத்ததனால் வஞ்சத்துப்***
***பூனை "ஞாம் ஞாம்(நாம்)"***

***காக்கின்றோம் எனச்சொல்லக்***
***கழுதைஅதை "ஏ" என்று***
***கடிந்து கூறும்***

***"கூ" எனவே வையத்தின்***
***பேருரைத்துக் குயில் கூவும்,***
***"வாழ் வாழ்" என்று***

***நாவினிக்க நாய்வாழ்த்தும்,***
***நற்சேவல் "கோ" என்று***
***வேந்தன் பேரைப்***

***பாவிசைத்தாற் போலிசைக்க,***
***வருங்காற்றே "ஆம்" என்று***
***பழிச்சும்! இங்கு***

***யாவினுமே தமிழல்லால்***
***இயற்கைதரும் மொழிவேறொன்***
***றில்லை யன்றோ?*** ***(தமிழியக்கம் ,ப .527)***

என்று இயற்கை முழுவதும் தமிழே என இயம்புகிறார் பாவேந்தர்.

தமிழ் மிகவும் பழமையான மொழி என்பதையும், தனித்தியங்கும் ஆற்றல் பெற்ற தென்பதையும் மொழியியல் அறிஞர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். தமிழிலுள்ள பழைமையான இலக்கியங்கள் உலக இலக்கியங்களுடன் ஒப்பிடுமளவுக்கு உயர்வுபெற்றவை. இவற்றைத் தமிழர் உணரவேண்டுமெனப் பாவேந்தர் கீழ்க்கண்டவாறு வலியுறுத்துகிறார்.

***“தனித்தியங் குத்தன்மை தமிழினுக் குண்டு;***
***தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு!***
***கனிச்சாறு போல்பல நூலெலாம் கண்டு***
***காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு”*** ***(இசையமுது ,ப . 239)***

***தமிழின் நிலைமை***

*தமிழைத் தாய்மொழியாகக் கொண்டோர் என மக்கள் கணக்கில் கூறிக்கொள்பவர்கள் கோயில்களிலும், விழாக்களிலும், வீட்டு நிகழ்ச்சிகளிலும் வடமொழிக்கு முதன்மைத் தருபவர்களாகவே இருக்கின்றனர். வடமொழிகலப்பு வளர்ந்தது போதாதென்று இன்று இந்திகலப்பும் தமிழைக்குழப்பிக் கொண்டு இருக்கின்றன. கதை, நாடகம், புதினம் எழுதுபவர்கள் இடைஇடையே பிறமொழிச் சொற்களையும் தொடர்களையும் எழுதித்தங்கள் திறமையை வெளிப்படுத்துவதாக எண்ணிக் கொண்டிருக்கின்றனர். உண்மையில்அவர்கள்தமிழ்க்கொலைஞர்களாகவேஉலாவருகின்றனர். இன்றும் இந்நிலை எனில் எழுபது ஆண்டுகட்கு முன்னிருந்த நிலையை நாம்எண்ணிப் பார்க்கவேண்டும். இதைவிட தாழ்வான நிலையிருந்தபோதுதான்,*

***"திருடர்கள் ஜாக்கிரதை இதைத்***
***திருடருண்டு விழிப்போடு***
***இருங்கள் என்றால்,***

***வருந்தீமை என்ன? நியா***
***யஸ்தலத்தை அறமன்றம்***
***எனில்வாய்க் காதோ?***

***அருவருக்கும் நெஞ்சுடையார்***
***அருவருக்கும் செயலுடையார்***
***அன்றோ இந்தக்***

***கருவறுக்கும் வினைசெய்வார்,***
***கலப்பாலில் துளிநஞ்சும்***
***கலத்தல் வேண்டாம்."*** ***(தமிழியக்கம், ப.520)***

*எனப்பாவேந்தர்பாடவேண்டியநிலைஏற்பட்டது.*

*இன்றும்கோயில்களில்தமிழ்இடம்பெற்றுள்ளதாஎன்றால்வேதனைதான்விடையாகக்கிடைக்கும். தமிழ்நாட்டில்தமிழன்கட்டியகோயில்களில்வழிபாடுதமிழில்மட்டுமேநடைபெறவேண்டும்எனவற்புறுத் தத்தமிழருக்குஉரிமைஉண்டு.*
*ஏமாந்தகாலத்தில்இடம்பெற்றவடமொழியின்வழிபாட்டில்தான்கோயில்கள்இருக்கின்றன. "தமிழிலும்அர்ச்சனைசெய்யப்படும்"என்றபலகைமட்டுமேதமிழும்இங்கிருப்பதுபோலத்தோற்றத்தைத்த ருகிறது. கோயிலுக்குச்செல்பவர்களுக்குஉண்மைநிலைபுரியும். பாவேந்தர்கடவுள்வழிபாட்டிலும், விழாக்களிலும்நம்பிக்கையற்றவர்என்றாலும்கோயில்கள்இருக்கும்வரைஅங்குவழிபாடுதமிழில்நடைபெ றவேண்டும்என்பதுபாவேந்தர்கருத்தாகும்.*

***உயிர்போன்ற உங்கள்தமிழ்***
***கடவுளுக்கே உவப்பாதல்***
***இல்லை போலும்!***

***உயிர்போன்ற உங்கள்தமிழ்***
***உரைத்தக்கால் கடவுளதை***
***ஒப்பார் போலும்!***

***பயிரழிக்கும் விட்டிலெனத்***
***தமிழ்மொழியைப் படுத்தவந்த***
***வடமறைதான்***

***செயிர்தீர வாழ்த்துதற்கும்***
***தேவையினைச் சொல்லுதற்கும்***
***உதவும் போலும்!*** ***(தமிழியக்கம், ப.528)***

*என்ற அவரது குமுறல் ஈண்டு எண்ணத்தக்கதாகும்.*

*கடைத்தெருவுக்கு வந்தால் வணிகர்களிடம் தமிழ்ப்பற்று இருக்கிறதா? இருந்தால் அவர்களது பெயரப்பலகையே காட்டிவிடுமே? இன்றும் ஆங்கிலப்பெயரைத் தமிழில் எழுதியுள்ள பெயர்ப் பலகைகளைத்தான் மிகுதியும் காணமுடிகிறது. கேட்டால் பழக்கத்தில் வந்து விட்ட சொல்லை ஏன்மாற்ற வேண்டும் என எதிர்வினாவிடுப்பர். "பவன்" "மண்டல்" "கிளப்" " சில்க்ஷாப்" "ரெஸ்டாரண்ட்" "ஸ்டோர்ஸ்" "மார்க்கெட்" எனஎழுதப் பெற்றுள்ள பெயர்ப்பலகைகளே மிகுதியும் காணப்படுகின்றன. இதனை,*

***உணவுதரு விடுதிதனைக்***
***'கிளப்'பெனவேண்டும் போலும்!***
***உயர்ந்த பட்டுத்***

***துணிக்கடைக்கு 'சில்கு ஷாப்'***
***எனும்பலகை தொங்குவதால்***
***சிறப்புப் போலும்!***

***மணக்கவரும் தென்றலிலே***
***குளிராஇல்லை? தோப்பில்***
***நிழலா இல்லை?***

***தணிப்பரிதாம் துன்பமிது!***
***தமிழகத்தின் தமிழ்த் தெருவில்***
***தமிழ்தான்இல்லை!*** ***(தமிழியக்கம், ப.517)***

*எனஅன்றேவேதனைப்பட்டுள்ளார்பாவேந்தர்.*

*தமிழனின் வாழ்வு தமிழில் தான் உண்டு. தமிழ்மறைந்தால் தமிழனின் வாழ்வும் கருகிவிடும் என்பதைக்,*

***"கண்ணானதமிழ்மறைந்தால்***
***கருகாதோதமிழர்வாழ்வு!*** ***(குறிஞ்சித்திட்டு ,ப – 1191)***

*எனத்தெளிவுபடுத்துகிறார்.*

*பிறமொழியாதிக்கத்தால் தமிழும் தமிழ்நாடும் தளைபடல் ஆகாது என்பது பாவேந்தர்கருத்து. இத்தகு நிலை தமிழர்கள் உள்ளம் ஒன்றுபட்ட நிலையில் உழைத்தால் தான்இயலும். எனவே தான்குயிலைப் பார்த்துப் பாவேந்தர்,*

***செந்தமிழைச் செந்தமிழ் நாட்டைச் சிறைமீட்க***
***நந்தமிழர் உள்ளத்தில், வையம் நடுநடுங்கும்***
***வெந்தணல் ஒன்று விரைந்து வளர்ந்ததென்று***
***குந்திக் குரலெடுத்துக் கூவாய் கருங்குயிலே! (பாரதிதாசன்கவிதைகள், இரண்டாம்தொகுதி, ப.792)***

*எனவேண்டுகிறார்.*

*தமிழகத்தில் பெயரளவில் தமிழ் இன்று ஆட்சிமொழியாகவும், சட்டமன்ற மொழியாகவும் இருக்கிறது. பாடமொழியாகவும், பயிற்று மொழியாகவும் முழுமை பெறவில்லை. அரசுத்துறைகள் பலவற்றில் இன்னும் தமிழ் இடம்பெறவில்லை. தமிழ் எல்லாத்துறைகளிலும் இடம்பெற, தமிழறிஞர்கள் ஒன்று சேர்ந்துதொண்டாற்றவேண்டும்என்பதுபாவேந்தர்விழைவு.*

*தமிழ்நாட்டில் தமிழ் மணங்கமழவேண்டும். காதில்விழும் இசைதமிழிசையாக இருக்க வேண்டும். கண்ணில் காண்பன எல்லாம் தமிழ்மொழியின் ஏற்றம் சாற்றுபவைகளாக இருக்க வேண்டும். உலகில் ஏற்றம் பெறும் மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்று என்று அனைவராலும் போற்றப்படும் நிலைதமிழுக்குவாய்க்கவேண்டும். இதுபாவேந்தர்கொள்கை. இதனை,*

***என்னருமைத் தமிழ்நாட்டை***

***எழிற்றமிழால் நுகரேனோ?***

***செவியில் யாண்டும்***

***கன்னல்நிகர் தமிழிசையே***

***கேளேனோ? கண்ணெதிரில்***

***காண்ப வெல்லாம்***

***தன்னேரில் லாததமிழ்த்***

***தனிமொழியாய்க் காணேனோ?***

***இவ்வை யத்தில்***

***முன்னேறும் மொழிகளிலே***

***தமிழ்மொழியும் ஒன்றெனவே***

***மொழியே னோநான்! (தமிழியக்கம் ,ப. 539)***

*என்கிறார்.*

**தமிழரின்கடமை**

*தமிழ்மொழியை வாழவைக்க வேண்டுவதும், வளர்க்கவேண்டுவதும் தமிழர் தம் கடமை. அயல்மொழி ஊடுருவும்போது அதனை அண்டவிடாமல் காக்கவேண்டுவது தமிழர்தம் கடமை. அயல்மொழிச் சொற்கள் தமிழில் பெருகினால் அதனால் தமிழுக்குத்தாழ்வு. தமிழனுக்குத்தாழ்வு. அறிவுவளர்ச்சியில் புதிய புதிய கலைச்சொற்களை உண்டாக்க வேண்டும். ஆக்க இயலும் வரை அயல்மொழிச் சொல் பயன்படுத்தப் பெறல்தவிர்க்க இயலாதது. ஆனால் பயின்று வரும் தமிழ்ச்சொற்களை நீக்கி அயல்மொழிச் சொற்களைத் தற்பெருமைக்காகக் கையாளுதல் தவறாகும். நன்றி இடத்தைத் "தேங்க்சு" பிடிக்கிறது. "அய்யா" இடத்தை"சார்"இடம்பிடிக்கிறது. "வணக்கம்" இடத்தை "குட்மார்னிங்" "குட்ஈவ்னிங்" பிடிக்கின்றன. இவ்வாறு அயல் மொழிச்சொற்களைத் தமிழ்ச்சொற்களை விலக்கிப் பயன்படுத்துபவன் தமிழனா? இது தாய்மொழி வளர்ச்சிக்குத் தடையல்லவா? பாவேந்தரின் இச்சிந்தனை,*

***"தமிழனும்தமிழும்தணலும்சூடும்***

***அமிழ்தமேயாயினும்அயல்மொழிஅயல்மொழி!***

***அயல்மொழிதமிழைஅண்டும்விழுக்காடு***

***தமிழ்மொழிதாழும்! தமிழன்தாழ்வான்" (குறிஞ்சித்திட்டு, ப – 1298)***

*என்றவரிகள்வெளிப்படுத்துகிறது.*

*ஒரு இனத்தின் வளர்ச்சி அவ்வினத்துக்குரிய மொழியின் வளர்ச்சியில் தான் இருக்கிறது. தமிழின் வளர்ச்சியே, தமிழ்நாட்டின் வளர்ச்சி தமிழ் நைந்து போகும் நிலைவந்தால் தமிழனும் நைந்து போவான். இதனை நன்கு அறிந்து ஒவ்வொருவரும் தங்கள் செயலால் தமிழைக்காக்கும் கடமையுணர்வு உடையவர்களாக வளரவேண்டும். இக்கருத்தினைத்தம் குறிக்கோளாகக் கொண்டபாவேந்தர்,*

***"செந்தமிழே !உயிரே ! நறுந்தேனே!***

***செயலினைமூச்சினைஉனக்களித்தேனே!***

***நைந்தாயெனில்நைந்துபோகுமென்வாழ்வு***

***நன்னிலைஉனக்கெனில்எனக்குந்தானே!" (இசையமுது, ப .237)***

*எனக்குறிப்பிடுகிறார்.*

*தமிழர் தங்களது மொழிவளர்ச்சிக்கு உண்மையாகவே பாடுபட வேண்டும். தமிழன் இப்போது எழுத்திலும் பேச்சிலும் தழிழைக்கலங்க வைக்கிறான். பிழையான உச்சரிப்பும், பிழையான தொடர்களும் அரங்கேற்றம் பெறுகின்றன. முதலில் தமிழன் தமிழின் பெருமையைக் காக்கப் பிழையில்லாமல் பேசவும் எழுதவும் கற்க வேண்டும். கற்பிக்க வேண்டும். கற்றதமிழன் எளிய நடையில் தமிழ்நூல்களை எழுதல்*

வேண்டும். வளர்ந்து வரும் நிலைக்கேற்றவாறு இலக்கணநூல்கள் புதிதாக ஆக்கல் வேண்டும். உலக அறிஞரது சிந்தனையில் உருவாகும் கருவிகளுக்கும், பொருள்களுக்கும் தமிழில் பெயர்காணல் வேண்டும். அவற்றைத் தெளிவான படங்களுடன் நூல்களாக்க வேண்டும். இவ்வாறு செந்தமிழை வளமிக்க தமிழாக மாற்ற வேண்டும். வறுமையினால்கற்கஇயலாநிலைஇருத்தலாகாது. அனைவரும்கற்றவராதல்வேண்டும். ஒருவன் கற்கவில்லையென்றாலும்அதற்காகஅனைவரும்நாணப்படும்நிலைவரவேண்டும்என்பதனை,

***“எளிய நடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்.***
***இலக்கண நூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்.***
***வெளியுலகில், சிந்தனையில் புதிது புதிதாக***
***விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாங் கண்டு***
***தெளியுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து***
***செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்.***
***எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால்***
***இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்.”***

***(பாரதிதாசன்கவிதைகள்,முதல்தொகுதி,ப .172)***

என்கிறார்பாவேந்தர்.

தமிழுக்கும் தமிழ்மக்களுக்கும் நல்லதொண்டு செய்யவேண்டும். ஒவ்வொரு நாளும் தமிழைப் பற்றிய சிந்தனை, தமிழ்வெல்க வேண்டு மென்ற உணர்வு வளர்ந்து வரவேண்டும்.

***“தமிழுண்டு தமிழ் மக்களுண்டு — இன்பத்***
***தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு***
***தமிழ் என்று தோள் தட்டி ஆடு! நல்ல***
***தமிழ் வெல்க வெல்க என்றே தினம் பாடு!***

***(பாரதிதாசன்கவிதைகள், முதல்தொகுதி ,ப .178)***

எனப்பாவேந்தர்பாடுகிறார்.

***முடிவுரை***

***“எங்கள்வாழ்வும்எங்கள்வளமும்***
***மங்காததமிழென்றுசங்கேமுழங்கு”***

***(பாரதிதாசன்கவிதைகள், முதல்தொகுதி ,ப .180)***

என்ற முழக்கத்தின் வழிவாழ்வும் வளமும் தமிழே என வலியுறுத்தும் பாவேந்தரின் தமிழ்ப்பற்றும் தமிழ்ணர்வும் அவரது படைப்புகளில் பல்வேறு நிலைகளிலும் ஊடுருவி இருக்கின்றன.

**தொகுப்புரை**

- உலகின்முதன்மொழிதமிழ்என்றும்,இயற்கைமுழுவதும்தமிழேஎன்றும்இயம்புகிறார்பாவேந்தர்.
- வீட்டில், வீதியில், விழாக்களில், கோயில்களில்தமிழ்மொழிஇல்லை.
- தமிழகத்தில்பெயரளவில்தான்தமிழ்ஆட்சிமொழியாகவும், சட்டமன்றமொழியாகவும்இருக்கின்றது.
- உலகில்ஏற்றம்பெறும்மொழிகளுள்தமிழும்ஒன்றுஎனும்நிலைதமிழுக்குவாய்க்கவேண்டும்என்பதுபாவேந்தரின்கொள்கை.
- அயல்மொழிஊடுருவும்போதுஅதனைஅண்டவிடாமல்காப்பதும், தமிழ்மொழியைவாழவைப்பதும், வளர்ப்பதும்தமிழரின்கடமை.

**துணைநின்றநூல்கள்**


1. பாரதிதாசன் – அழகின்சிரிப்பு
2. பாரதிதாசன் – இசையமுது
3. பாரதிதாசன் – குறிஞ்சித்திட்டு
4. பாரதிதாசன் –தமிழியக்கம்
5. பாரதிதாசன் – பாரதிதாசன்கவிதைகள்முதல்தொகுதி
6. பாரதிதாசன் – பாரதிதாசன்கவிதைகள்இரண்டாம்தொகுதி

# பன்னிரு திருமுறை திருமந்திரம் காட்டும் சமூகம்

*த.வசந்தி, *எம்.ஏ, பி.எட். ஆய்வியல் நிறைஞர், தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) எளையாம்பாளையம், திருச்செங்கோடு, நாமக்கல் 637 205.*

திருமுறைக் குறிக்கோளினைக் கற்பிப்பது முழுமுதற் கொள்கையினை நிலைநாட்டுவது மனிதப் பிறவியை மதிப்பது பெரும்மித பொலிவினை பேசுவது நல்ல வண்ணம் வாழ வழிகாட்டுவது மக்கள் தொண்டே மகேசன் தொண்டென மொழிவது சமயம் என்பதன் பொருள் சைவ சமயக் குறவர்கள் இறைவழிபாட்டின் பயன் உடம்பினைப் பாதுகாப்பது அவசியம், திருமந்திர ஒருமைப்பாடு மனிதநேயம் திருமந்திரம் கூறும் வாழ்க்கைக் கூறுகள் என்ற தலைப்புகளின் மூலம் திருமந்திரத்தின் உள்ளிலிருந்து பாமரனின் மனிதில் எளிதில் சென்று சேரக்கூடிய வகையில் அமைந்த பாடல்களை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

**"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த**

**மறைமொழி தாள மந்திரம் என்ப"**

என்னும் தொல்காப்பியர் கருத்துப்படி திருமூலர் நாயனாரால் இயற்றப்பட்ட திருமந்திரத்தில் சமூகச் சிந்தனைப் பற்றி காண்போம்.

**இறைவழிபாட்டின் பயன்**

எடுத்த செயல் இனிதே நிறைவு பெற இறைவனை வணங்குதல் மரபாகும். நாள்தோறும் ஆண்டவனை வழிபடுவதும் பிறர் உயிர்களிடத்தில் கருணை காட்டுவதும் இன்சொல் கூறுவதும் வாழ்கைப் பண்ப்பாடாகும்.

இக்கடமைகள் எல்லோராலும் செய்ய முடியும். இதனை யாவர்க்கும் புரியும் படியாக,

**'யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை**

**யாவர்க்கு மாமபசு வுக்கொரு வாயுறை**

**யாவர்க்கும் மாம்உண்ணும் போதொரு கைப்பிடி**

**யாவர்க்கு மாம்பிறர்க் கினனுரை தானே'**

என அழகுத் தமிழல் எடுத்துரைக்கிறார் திருமூலர்.

வஞ்சமில்லாமல் இறைவன் திருவடியை வாழ்த்திய மார்கண்டேயரை அழைத்துச் செல்லச் வந்த கூற்றுவனை உதைத்துத் தள்ளி, சிவப்பொருமான் அருளிச் செய்தது போல் இறைவருள் பெறுங்கள் என்கிறார்.

**'வாயென்று சொல்லி மனமொன்று சிந்தித்து**

**நீயொன்று செய்யல் உறுதி நெடுந்தகாய்**

**தீ யென்றிங் குன்னைத் தெளிவன் தெளிந்தபின்**

**பேயென்றி கென்னைப்பிறர் தெளிகிலாரே’**

*(திருமந்திரம் அபக்குவன - 16.55 பாடல்)*

சொல், எண்ணம், செயல் மூன்றும் ஒன்றோயொன்று இணைந்திருப்பதுதான் உறுதி இவ்வுறுதி உடையவர் சிவனை வழிபட்டால் எல்லா இன்பங்களும் அடைவர் என்பர்.

‘ஊள்குவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளுடையவன் இறைவன்’

‘சர்வ வியாபி என்ற பகுதியில் பற்றினுள்ளே பரஹமாய பரஞ்சி சுடர்’’ என்ற பாடல் மூலம் இவ்வுலகில் உள்ள மெய்ப்பொருள்கள் அனைத்திலும் வீற்றிருப்பவன் சிவபெருமானே ஆவார் என்கிறார்.

எனவே உயிர்களிடத்தில் அன்பு செலுத்த வேண்டும் என்றும் எல்லா உயிர்களும் இறையுருவே என்பதனை நினைவில் நிறுத்த வேண்டும் என வலியுறுத்துகிறார்.

**விழிப்பு நிலை (முன் உணர்வு நிலை)**

இறைநிலையில் மன்னுணர்வை சித்து நிலை என்று கூறுவர். அஞ்ஞானத்தை உணர்ந்து அதனின்றும் விலகிக் கொள்ளும் அறிவு உணர்வு நிலையில் இயல்பாகவே உள்ளது எனவே தான் உணர்வின் உள்ளுறைப் பொருளை மனம் எனவும் விழிப்பு நிலையையே முன்னுணர்வு நிலை எனவும் கூறுவர்.

உணர்வு அதன் அடித்தளமாகிய முன்னுணர்வை நோக்கிச் செல்லும் போது தன்னையறிகின்ற மெய்ஞான நிலையினை அடைகின்றது. அதுவே மனமற்ற சிந்தனையற்ற மோன நிலையாகும்

**திருமந்திரத்துள் ஒருமைப்பாட்டுணர்வு**

இறைவனே அனைத்திலும் உணர்ந்தவன், உருவமில்லாதவன், அழிவற்றவன். எல்லையற்றவன், ஆனந்த வடிவானவன் பிறப்பு, இறப்பு, விருப்பு, வெறுப்பு, இல்லாத உண்மையின் வடிவானவன் என்ற கருத்தை வலியுறுத்தும் நோக்கில்

**‘ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்**

**நன்றே நினைமின் நமனில்லை நாணாமே**

**சென்றே புகங்கதி யில்லை சித்தத்து**

**நின்றே நிலைபெற துய்மினே’** *(திருமந்திரம் பாடல் 2066)*

என்ற பாடல் மூலம் அருமையாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

**திருமந்தரத்தில் மனித நேயக் கருத்துகள்**

மனித குலம் மேம்பாடைய மனித நேயம் இன்றியமையாதது அன்பு, அருள், இரக்கம் இருந்தால் மனிதநேயம்சிறப்பாக வளரும்.

**‘அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**

**அன்பே சிவமாவ திரும் அறிவிலார்**

**அன்பே சிவமாவ தாரம் அறிந்த பின்**

**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே’**

என்ற பாடல் மூலம் எல்லா உடம்பினிலும் விற்றிருக்கும் இறைவனை அன்போடு உருகி அடைத்தாலே இறையருளை எளிதில் பெறலாம் என்கிறார்.

அதோடு மட்டுமல்லாமல் ‘இறைவன் கோயில் கொண்டுள்ள உடலை உடைய மானிடர்க்கு ஒன்று ஈந்தால் அது இறைவனுக்கு ஆகி விடும். என்பதை உணர்த்து,

‘படமாடக் கோயில் பகவற்கொள் றீ யில்

நடமாடக் தோலில் நம்பர்கங் காக

நடமாடக் கோயில் நம்பர்க் கெண் றீ ீலு்

படுமாறுக் கோயிற் பகவற்க தாமே’ *(மகேசுவர பூசை – 1821 பாடல்)*

என்கிறார்.

இப்பாடல் ‘ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்ற தத்துவம்’ அடங்கியுள்ளதைக் காணலாம்.

‘இன்பமுத் துன்பமும் நாட்டா ரிடத்துள்ள

நன்செல் புன்செய் லாலந்த நாட்டற்காம்

என்ப இறை நாடி நாடோறும் நாட்டினின்

என்பதைத செப்பஞ் செயின் வையம் வாழுமே *(அவவேடம் 1629 பாடல்)*

என்ற பாடல் மூலம் மக்கள் செய்கின்ற நல்வினை, தீவினைகளுக்கேற்பவே நாடும் சிறப்பினை அடையும் என்கிறார். இச்சதரத்தை பட்டினத்தடிகள் ,

ஒட்டப்பம் வீட்டைச் சுடும்

தன்வினை தன்னைச் சுடும்

என்ற பாடல் வழியாகக் கூறுகிறார்.

செல்வம் நிலையற்றது, எனவே ஈட்டிய செல்வத்தைப் புட்டி வைக்காமல் பலருக்கும் பயன்படும்படியாக வழங்க வேண்டும் இல்லையேல் செல்வம் உடையனுக்குத தீங்கே ஏற்படும் என்ற கருத்தை,

‘ஈட்டிய தேன்பு மனங்கண் மரதமும்

கூட்டிக் கொணர்ந்தொரு கொம்பிடை வைத்திடும்

ஓடடித் துரந்திட்டது வலி யார்கொளக்

குட்டிக் கொடுத்து கையிட்ட வாறே’

என்று வரும் பாடல் மூலம் விளக்குகிறார் இக்கரத்தை,

‘ஈயார் தெட்டைத் தியார் கொள்வர்’

என்ற முதுமொழி வாயிலாக அறியலாம்.

திருமூலர் திருமந்திரத்தில் வாழ்க்கைக்குத் தேவையான எல்லா கருத்தக்களையும் தெளிவுபடுத்தி உள்ளார். இறையியல் நெறியையும் உலகியல் நெறியையும் இணைத்து நடத்தம எளிய வாழ்க்கையின் மூலம் இன்பங்களும் பெற்று வீடுபேறு அடையலாம் என்னும் கருத்து இந்நூலிருந்து எடுத்தாளப்பட்ட சில பாடல்கள் மூலம் வெளிப்படுகிறது.

**துணை நூல்கள்**


1. டாக்டர் சோ. ந. கந்தசாமி – பன்னிரு திருமுறை முதல் பதிப்பு – 2007.
2. பொதுப் பதிப்பாசிரியர் - முனைவர் வி பழனியப்பன்
3. பதிப்பாசிரியர் - முனைவர் தா.முணி, சைவம் வளர்த்த தமிழ் - தொகுதி மெய்யப்பன் பதிப்பகம், 53, புதுத்தெரு சிதம்பரம் - 605001. முதல் பதிப்பபு – 2007.

# வரலாற்று நோக்கில் ஏறுதழுவல்

***சு.மகேஷ் பாண்டி,** *முனைவர் பட்ட ஆய்வாளர், அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி. நோக்கு களம்.*

ஏறுதழுவல் தமிழ்ச்சமூகத்தின் மரபார்ந்த வீரவிளையாட்டுக்களுள் ஒன்று. தொல்குடிச்சமூகத்தின் எச்சமாகவும் வரலாற்று இயங்கியலின் நீட்சியாகவும் இ∴து அமைகிறது. உற்பத்தி சக்திகளாகவும் மிக நெருங்கிய உற்பத்தி உறவுகளாகவும் மனிதர்களும் மாடுகளும் திகழ்கின்றன. உயர்திணை, அ∴றிணையாகிய வாழ்வியல் மானுடத்தால் சமநோக்குடைமை ஆகிற்று. இத்திணைகளிரண்டும் வலிமையான மரபணுவைப் பதியமிடும் எதிர்காலவியலின் இலக்காகவும் ஏறுதழுவல் முன் நகர்த்தப்படுகிறது. தமிழ்ச்சமூகத்தின் காலச்சுவட்டில் ஏறுதழுவலின் ஆழப்புதைவையும் அதன் கட்டுக்கடங்காக இயங்கியலையும் அதற்கான தேவையினையும் நோக்கும் களமாக இக்கட்டுரை விரிகிறது.

**ஏறுதழுவல்**

கட்டின்றித் திகழும் வலிய காளையினை வீரனொருவன் அடக்கும் செயல்முறையும் காளையின் திமிலைப் பற்றி பயணம் செய்கின்ற நிகழ்வும் ஏறுதழுவல் என்றழைக்கப்படுகிறது. வீறுமிக்க காளையினை அடக்கி அதனை அகப்படுத்துதல் என்னும் கருத்தில் இதனை ‘ஏறுகோடல்’ என்றும் இச்செய்கையில் காளையால் கொல்லப்பட்டு வீரன் இறக்கவும் நேரிடும் என்பதில் காளையின் வலிமையும் சுட்டப்படுவதால் இதனைக் ‘கொல்லேற்றுக்கோடல்’ என்றும் கலித்தொகை மொழிகின்றது. காளையை ‘ஏறு’ என்று சங்கச்சொல்லாடல் குறிப்பிடுகின்றது. யானையுடன் ஒப்பிடத்தக்க வலிய காளையின் மீது பாய்ந்தேறிய வீரன் தன் உயிரையும் பொருட்படுத்தாது,

தன் வலியால் காளையடக்கும் செயல்பாடு தழுவல் என்ற பொருளுடையது, தமிழ்ச்சமூகத்தின் உற்பத்திக் கருவிகளாகவும் உறவுகளாகவும் திகழும் மனிதர்களுக்கும் மாடுகளுக்குமான வீரப்புலப்பாடு ‘ஏறுதழுவல்’ என்ற பொருளாளுமையுடன் சொல்லடைவு பெறுகின்றது.

**ஏறுதழுவலின் சமூகப்பின்புலம்**

மானுடப் படிநிலை வளர்ச்சியில் ஆநிரைகளின் ஊடாட்டம் சமூக வாழ்வியலைக் கட்டமைக்கிறது. வேட்டைச்சமூகத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட மானுடம் ஆநிரைகளைப் பணிவித்து வாழ முற்பட்டது. கட்டின்றித் திரியும் ஆநிரைகளைத் தன் கட்டுக்குள் கொண்டு வருதல் என்பது தொல்குடிச்சமூகத்திற்கு அத்துணை இலகுவாய் அமைந்திராது என்பது திண்ணம். அதற்காக எண்ணற்ற உயிர்களை இழந்திருக்கும். வீரர்கள் தங்கள் உயிரைப் பணயம் வைத்துக் கொட்டிலில் அடைக்கப்பட்ட ஆநிரைகள் அக்காலச் சமூகத்தினரால் மாபெரும் செல்வமாக எண்ணப்பட்டது. ஆநிரைகள் நிலவுடமைச்சூழலுக்கு மனிதர்களை நகர்த்தியது. ஆநிரைகள் வளர்ப்புக்கென்று கண்டுபிடித்த தானிய உற்பத்தி உழவுத்தொழிலுக்கு முன்னோடியாகியது. உழைப்பவன், உழுவிப்பவன் என்ற சமூகத்தை

உருவாக்கியது. ஆநிரைகளால் உருவெடுத்த சமூகத்தில் ஆநிரைகள் பணப்பரிவர்த்தனையின் செயல்பாட்டு வடிவமாகியது. ஆநிரைகளை மையமிட்ட போர்த்தாக்குதல்கள் வெட்சி, கரந்தை என்ற புறத்திணை வடிவங்களாகின.

தன் பெண்ணைக் காக்க வேண்டுமெனில் செல்வத்தை ஈட்ட வேண்டும். செல்வமாகக் கருதப்பட்ட ஆநிரைகளை ஆடவன் அடக்கிக் கொணர வேண்டும். காலச்சுழற்சியில் வளர்ப்பு மாடுகள் பல்கிப் பெருகிவிட்ட சூழலில் காட்டுமாடுகளைப் பிடித்துப் பழக்கும் தேவை குறைந்த நாளில் தொல்குடிச்சமூகத்தின் மரபான வாழ்வியலின் அறுபடாத பயிற்சி முறையாகவும் தமிழர் பண்பாட்டு எச்சத்தின் அடையாமாகவும் 'ஏறுதழுவல்' இன்றும் நீடிக்கிறது.

**தடயங்கள் முத்திரை**

சிந்து சமவெளி அகழாய்வுகளில் கண்டறியப்பட்ட சுடுமண் முத்திரைகளில் காங்கயம் காளைகளின் திமில் காணப்படுகிறது. புதுதில்லி தேசிய அருங்காட்சியகத்தில் வைக்கப் பெற்றுள்ள மாடு அணையும் கல்முத்திரை மொகஞ்சதாரோவில் 1930 இல் கண்டறியப்பட்டது. இது குறித்து ஆய்வு செய்த ஐராவதம், மகாதேவன் போன்ற அறிஞர்கள் இ∴து ஏறுதழுவதலைக் குறிக்கும் சின்னம் என்பதை நிறுவியுள்ளனர். அஸ்கர்போலோ போன்றோர் இதனை தொல்திராவிட நாகரிகம் என்று கருதுகின்றனர்.

**ஓவியங்கள்**

நீலகிரி மாவட்டம் கோத்தகிரிக்கு அருகிலுள்ள கரிக்கையில் ஏறுதழுவலைக்குறிக்கும் ஓவியம் காணப்படுகிறது. இதன் காலம் கி.மு 2000-1500 ஆக கணிக்கப்படுகிறது. உசிலம்பட்டி அருகே கல்லூத்து மேட்டுப்பட்டியில் கி.மு 1500 ஆம் ஆண்டு ஏறுதழுவல் ஓவியம் உள்ளது. தேனிமாவட்டம் மயிலாடும் பாறைக்கு அருகில் அருகவெளியிலுள்ள சித்திரக்கல் புடவில் திமிலுடன் கூடிய காளையின் ஓவியம் ஆய்வாளர்களால் கண்டறியப்பட்டுள்ளது.

**நாணயங்கள்**

கி.மு 3 ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் ஏறுதழுவல் நடைபெற்றதற்கான சான்று கொற்கைப்பாண்டியனின் நாணயத்திலுள்ளது. நாணயத்தின் முன்புறத்தில் எருதொன்று இடப்பக்கம் நோக்கி நிற்கின்றது. நாணயத்தின் பின்புறத்தை மிகநுட்பமாக நோக்கின், வீரனொருவன் எருதினை அடக்கும் காட்சி பொறிக்கப்பட்டுள்ளது.

**கல்வெட்டுகள்**

ஆநிரைகளை மையம் கொண்டு நிகழ்ந்த கரந்தைப் போரில் உயிர்நீத்த வீரனுக்கு நடுகல் எடுத்துள்ளனர். திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் கி.பி 13 ஆம் நூற்றாண்டிற்கான கல்வெட்டு இதனை நினைவுகூர்கின்றது. ஆநிரைகளைப் பாதுகாக்க புலியுடன் போரிட்டு உயிர்நீத்த வீரனுக்குப் புலிகுத்திக்கல் என்றழைக்கப்படும் நடுகல் எடுக்கப்பட்டதை, கோவை மாவட்டம் நெகமம் அருகேயுள்ள கி.பி 12 ஆம் நூற்றாண்டிற்கான கல்வெட்டு பறைசாற்றுகின்றது.

**ஏறுதழுவல் சிலையும் கதையும்**

மதுரை மாவட்டம் செக்கானூரணிக்கு அருகிலுள்ள செரிக்காம்பட்டியில் ஏறுதழுவும் நிலையிலுள்ள வீரனொருவன் சிலையை மக்கள் கோயில் கட்டி வழிபாடு செய்துவருகின்றனர். இதன் பின்னணியில் 400 ஆண்டுகால பழமையான காதல்கதையும் சூழ்ச்சியும் உட்புதைந்துள்ளது.

செரிக்காம்பட்டியைச் சேர்ந்தவர் கருத்தமாயன். இவரது மகன் அழகாத்தேவன் பொறுப்பற்ற இளைஞனாக இருக்கிறான். அவனுக்குத் திருமணம் முடித்துவைத்தால் பொறுப்பு வந்துவிடும் என்ற எண்ணத்தில், நாகமலைக்கு அருகேயுள்ள கீழக்குடியில் வாழ்ந்துவரும்

கருத்தமலையின் மகள் ஒய்யமாளைப் பெண்கேட்டுச் செல்கிறார். ஒய்யம்மாளுக்கு அழகாத்தேவன் மீது விருப்பம் ஏற்பட்டாலும் திருமணம் புரிவதற்கு ஒரு நிபந்தனை விதிக்கிறாள். தான் வளர்த்துவரும் ஏழு காளைகளை அழகாத்தேவன் அடக்கினால் திருமணத்திற்கு ஒத்துக்கொள்வதாகவும், தோற்றால் தன்வீட்டில் பண்ணையாளாக பணிபுரிய வேண்டும் என்றும் நிபத்தனை இடுகின்றாள். இதனை ஏற்றுக்கொண்ட அழகாத்தேவன் காளையடக்க களம் காண்கிறான். வலிதின் முயன்று ஆறு காளைகளை அடக்கியவனை ஏழாவது காளை பதம் பார்க்கிறது. ஏழாவது காளை அழகாத்தேவனின் குடலைச் சரிக்கிறது. தன்னுயிரையும் பொருட்படுத்தாத அழகாத்தேவன் ஏழாவது காளையையும் அடக்கிவிடுகிறான். சுற்றியுள்ள அனைத்து கிராமப்பகுதிகளிலும் பெயர் பெற்ற தங்களது காளைகளை இவன் அடக்கிவிட்டானே என்ற மாறுபாட்டால் ஒய்யமாளின் சகோதரர்கள் அழகாத்தேவனுக்கு வைத்தியம் பார்க்கும் மருத்துவச்சியிடம் கூறி நஞ்சூட்டி கொன்றுவிடுகின்றனர். இதையெல்லாம் அறிந்த ஒய்யமாள் அழகாத்தேவனுடன் உடன்கட்டை ஏறுகின்றாள். அழகாத்தேவனின் நினைவாக மதுரை மக்கள் கோயில் கட்டி வழிபாடு செய்துவருகின்றனர்.

**ஏறுதழுவலும் நேர்த்திக்கடனும்**

ஏறுதழுவல் சிறுதெய்வ வழிபாட்டு நம்பிக்கையுடன் தொடர்புடையதாகத் திகழ்கிறது. அம்மை, வைசூரி போன்ற கொடிய நோய்கள் பரவிய காலத்திலும் மழையில்லாக் காலத்திலும் பிள்ளைவரம் கேட்கும் நிலையிலும் மக்கள் கடவுளிடம் வேண்டுகின்றனர். இக்குறைகள் நீக்கப்பட்டால் பொங்கல் நாளன்று சல்லிக்கட்டுகிறோம் என்று நேர்த்திக்கடன் போட்டுக்கொள்கின்றனர் இவ்வாறு ஏறுதழுவல் மக்களின் வழிபாட்டுடனும் இணைகிறது.

**காளையும் பிற நாட்டுப்பண்பாடும்**

ஸ்பெயின் நாட்டில் எருதுடன் இரு வீரர்கள் களமிறக்கப்படுகின்றனர். சிவப்புநிறத் துணியுடன் ஒருவனும் கூரிய ஈட்டியுடன் ஒருவனும் ஆகிய இருவர் ஒருவருக்கொருவர் துணையாகவிருந்து காளையின் முதுகில் ஈட்டினைக் குத்தி அதனைக் கொல்கின்றனர். மாட்டின் கொம்பில் தாரினைக் கட்டி அதற்கு நெருப்பிட்டு களத்தில் இறக்கிவிடுகின்றனர். நெருப்பு கொஞ்சம் கொஞ்சமாக முகம், திமிலென உடல் முழுதும் பரவி காளை துடிதுடித்து இறக்கின்றது.

மெக்சிகோவில் காளைக்கு மதுபானம் கொடுத்து படகில் கட்டி ஆற்றிற்குள் இழுத்துச் செல்கிறனர். மக்கள் அனைவரும் கூட்டிணைந்து காளையினை அடித்தும் கத்தியால் குத்தியும் அதனை மரணிக்கச் செய்கின்றனர். தென்னாப்பிரிக்காவில் காளையின் கழுத்தினை ஒடிப்பதே ஏறுதழுவலாக அமைகின்றது.

**இலக்கியத்தில் ஏறுதழுவல்**

ஏறுதழுவுதல் நிகழ்ச்சி முல்லைநில இளைஞனின் வீர வெளிப்பட்டிற்கும் காதல் புலப்பாட்டிற்கும் காரணமாக அமைந்தது. பருவம் எய்திய நிலையில் ஒவ்வொரு பெண்ணிற்கும் ஒவ்வொரு காளையினைத் தேர்ந்து வளர்க்கின்றனர். அக்காளையினை அடக்கினார்க்கு அப்பெண்ணை திருமணம் செய்து வைக்கின்றனர். கிருஷ்ணபகவான் தன் முறைப்பெண்ணான நப்பின்னையை ஏழு காளைகளை அடக்கி திருமணம் செய்தார். ஏறு தழுவலைத் தொடங்குமுன் பறையறைந்து ஏறுதழுவலைக் காணவும் அதனில் பங்கெடுக்கவும் அழைப்பு விடுக்கின்றனர். பல வண்ணமுடையதும் வகையுடையதுமான காளைகளை தொழுவிடத்தில் அடைக்கின்றனர். தொழுவில் இருந்து அவை சீறிப்பாய்ந்து வருகின்றன. பலவகையான நிறமுடையதும் மணமுடையதுமான மலர்களைப் பொதுவர்களான மாடுபிடி வீரர்கள் சூடி, நீர்த்துறையிலும் ஆலமரத்தின் கீழும் பழைய வலியினை உடைய மாமரத்தின் கீழும் உறையும் தெய்வங்களைப் பரவி காளையடக்க களமிறங்குகின்றனர். காளையை அடக்க இயலாது களத்தில் வீழும் காளையனை ஏறு குத்தாது மீண்டது. தமிழ்ச்சமூகத்தில் அஃறிணையும் அறத்திற்கு உட்பட்டது. தலைவன் மேல் தலைவி விருப்பம் கொண்டாலும்

களத்தில் காளைக்கு அஞ்சுபவனை மணக்கவிரும்பமாட்டாள். பாற்படுபொருட்களை விற்கும் ஆயமகள் தலைவன் தன் காளையடக்கி தன்னை மணந்துகொண்டான் என்பதை ஊரார் சொல்வதைக்கேட்டுப் பெருமிதம் கொள்கிறாள். காளையடக்கும் ஆடவனுக்கே பெற்றோர்கள் மகட்கொடை புரிந்தனர். ஏறுதழுவலின் நிறைவாக மன்னனையும் கடவுளையும் தொழுது மக்கள் குரவைக்கூத்தாடினர் என்ற ஏறுதழுவல் நிகழ்வுகளை கலித்தொகை பதிவு செய்துள்ளது.

சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவை ஏறுதழுவல் பற்றிக் குறிப்பிடுகின்றது. முக்கூடற்பள்ளு காளைகளின் வகைகளைச் சுட்டியுள்ளது. முல்லை நிலத்து ஆயமகள் தங்கத்தினாலான பொருட்களை விரும்பாமல் பசுக்களையும் அதன் கன்றுகளையும் விலை கொடுத்து வாங்கியதை பெரும்பாணாற்றுப்படை தெரிவிக்கின்றது. மலைபடுகடாம் ஏறுதழுவலை நேரடியாகப் பதிவுசெய்யவில்லை. ஏறுதழுவலோடு தொடர்புடைய காளைகளுக்கிடையேயான பொழுதுதல்கள் பற்றிய குறிப்பைக் காட்டுகிறது.

**ஏறுதழுவலும் உலக அரசியலும்**

பீட்டா என்ற அமெரிக்க நிறுவன அமைப்பு 1980 பன்னாட்டு வர்த்தகதளக் கூட்டாளிகளுடன் இணைந்து விலங்குவதை தடை என்ற போர்வையில் பொருளாதார நோக்குடன் செயல்பட்டது. இந்தியாவின் மலைக்கவைக்கும் பால் உற்பத்தி பொருளாதாரத்தைக் குலைக்கும் வகையில் பன்னாட்டு நிறுவனங்கள் கலப்பின மாட்டினங்களை இந்தியாவிற்குள் கொண்டுவந்து தங்களின் பொருளாதரத்தை உயர்த்தும் நோக்கில் செயல்பட ஆரம்பித்தது. அதற்குத் தடையாக தமிழகத்தில் இருக்கும் சல்லிக்கட்டை முடக்க திட்டமிட்டது. இதன்காரணமாக, ஏறுதழுவலில் காளைகள் துன்புறுத்தப்படுகின்றன என்ற காணொளிக்காட்சியை உச்சநீதிமன்றத்தில் சமர்ப்பித்தது. உச்சநீதிமன்றம் 01-12-2016 அன்று சல்லிக்கட்டு நடத்த தடைவிதித்தது.

ஐரோப்பா பால்வர்த்தகத்தை அதிகரிக்கும் நோக்கில் செயல்பட்டதன் காரணமாக மாட்டினங்களில் மரபணுப்பிறழ்ச்சி உண்டாகியது. பொதுவாக மாடுகள் கன்றினைக் காணும் போதுதான் பால்சுரக்கும். ஆனால், மாட்டுப்பண்ணைகளில் இந்நிகழ்வு சாத்தியமன்று. மாட்டின் மடுவில் இயங்குநீர்ச்சுரப்பியைச் செலுத்தி பால்சுரக்கச் செய்கின்றனர். கறந்த பாலிலும் இயங்குநீரின் அளவு அதிகரிக்கின்றது. மேலும் கலப்பின மாடுகளின் பாலானது A1 வகையைச் சார்ந்தது. இதில் பெண்ணிய இயங்குநீரான, ஈத்திரோசன் அதிகளவில் காணப்படுவதால் சிறுமியர் விரைவாக பூப்படைதல், எதிர்பாலின ஈர்ப்பு, திருநங்கைகள் பிறப்பு, பலவித நோய்கள் உருவாகின்றது. தமிழக காளைகளையும் அதன் மரபணுவைப் பதியமிடுதலையும் இனக்கலப்பு தடுக்கின்றது. ஏறுதழுவல் ஒன்றே பொருளாதார, பண்பாட்டு உற்பத்தி சக்தியாக திகழ்ந்து மாட்டினத்தின் வீரிய மரபணுவை இன்றும் பதியமிட்டுக் கொண்டிருக்கிறது.

ஏறுதழுவுதல் வீரம், காதல், இறையாண்மை, பொருளாதாரம், பண்பாடு என்ற விரிந்த தளத்தில் இயங்குகின்றது. கால ஏட்டின் பக்கங்களில் ஏறுதழுவல் நீங்கா இடம்பிடித்துள்ளது. உலக அரசியல், பொருளாதரத்தை மையம் கொண்டு பண்பாட்டுச் சிதைவு உண்டாக்கத் துடிக்கின்றன. பண்பாட்டின் தழும்பினை இன்றளவும் தாங்கி, ஏறுதழுவல் வீரநடைபோடுகிறது. ஆண்மையின் வலிய மரபணுவைப் பதியமிடும் மணவினையாகக் காணப்பட்ட ஏறுதழுவல் இன்று பொங்கல் விழாவில் இடம்பெறும் பொழுதுபோக்கு விளையாட்டாக குறுகிவிட்டது. காளைகள் மட்டுமே தங்களின் மரபணுவை நீட்சி கொள்ளச்செய்கின்றன. நவீனத்துவக் கொள்கையின்படி ஏறுதழுவலுக்கான பண்பாட்டு மீட்புப்போராட்டத்தை தமிழினம் நிகழ்த்தி தடையற்ற ஏறுதழுவலைக் கைக்கொண்டுள்ளது. தமிழினப் பண்பாட்டை நிலைநிறுத்தியுள்ளது.

# தொல்காப்பியரின் மெய்ப்பாட்டியல் விளக்கத்தில் தமிழர்களின் பண்பாட்டு அடையாலங்கள்

*முனைவர் அ.நடராஜன், *உதவிப்பேராசிரியர், பாரதியார் பல்கலைக்கழகம், முதுகலை பட்ட விரிவாக்க மையம், ஈரோடு.*

சங்ககால இலக்கண இலக்கிய நூல்கள் தமிழரின் வரலாற்று ஆதாரங்களாக அமைவதுடன் பண்பாட்டையும், நாகரிகத்தையும் பேணிக்காக்கும் பெட்டகமாகவும் திகழ்கிறது. தமிழர்களின் பண்பாட்டை விளக்க முற்படும்போது அகம், புறம் என இருபெரும் பிரிவாக பகுத்து அதன்கண் மக்களின் பண்பாட்டு நிகழ்வுகளைப் பதிவு செய்த வரலாற்று களஞ்சியமாக சங்ககால இலக்கியங்கள் காணப்படுகின்றன. இவ்வாறு தமிழ் இலக்கியங்கள் மட்டுமல்லாமல் தமிழ்மொழியின் இலக்கணக் கட்டமைப்பை விரிவாக விளக்கும் தொல்காப்பியம் மொழியில் காணக்கூடிய நுன்கூறுகளை எடுத்து விளக்குவதுடன், அம்மொழியைக் கையாளும் மக்களின் பண்பாட்டு நிலைகளைக் காட்சிப்படுத்தும் விதமாக பொருளதிகாரத்தின் வழியாகத் தொல்காப்பியர் ஒவ்வொரு நிலையாக எடுத்து விளக்குகிறார். அவ்வகையில் பொருளதிகாரம் முழுவதுமே தமிழ் சமூகத்தின் பண்பாட்டு, நாகரிகத்தை வெளிப்படுத்தும் களமாக அமைந்த போதும் மெய்ப்பாட்டியல் வழி தொல்காப்பியர் விளக்க முற்படும் பண்பாட்டு அடையாளங்களை எடுத்து இயம்புவதாக இவ்வாய்வு அமைகிறது.

**ஆய்வின் நோக்கம்**

தொல்காப்பியம் தமிழ்மொழியின் அமைப்பையும் அதன் நுண்கூறுகளையும் எடுத்து கூறும் இலக்கண நூலக அமைந்தபோதும், பொருளதிகாரத்தின் வழி தமிழ் மக்களின் பண்பாட்டு அடையாளங்களை எடுத்து விளக்குகிறார் தொல்காப்பியர். அந்நிலையில் மெய்ப்பாட்டியலில் ஆசிரியர் வெளிக்கொணரும் பண்பாட்டு அடையாளங்களைத் தெளிவுபட விளக்குவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வு எல்லை**

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அமைந்துள்ள மெய்ப்பாட்டியல் முழுவதும் ஆய்வு எல்லையாக வரையறுத்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**பண்பாடுச் சொல்லாக்கமம், சொல் விளக்கமும்**

தமிழ்மொழியின் வரலாற்றில் மிகப் பழங்காலந் தொட்டே பண்பாடு, நாகரிகம் ஆகிய இருகூறுகளும் இலக்கியத்திலும், மக்கள் வாழ்விலும் நிறைவாகவே விளக்கப்பட்டு வருகின்றன. பண்பாடு என்றச் சொல்லைப் பிரித்து பொருள் உணர்த்தினால் பண்பு என்ற சொல்லுக்குப் பிறர் இயல்பை அறிந்து நடக்கும் நற்குணம், தன்மை, உண்மை, செய்தி, மக்கட் பண்பு என அகராதி விளக்கம் தருகிறது. எனவே பண்புபுடுதல் என்னும் பொருண்மையைச் சுற்றியே இவ்விளக்கங்கள் அமைவதைக் காணமுடிகிறது. பாடு என்பதற்கு உலகவொழுக்கம், பெருமை, முறைமை, உலகியல் போன்ற பொருள்கள் தரப்படுகின்றன. எனவே பண்பு + பாடு = பண்பாடு என்ற சொல்லாக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலை நாட்டு

அறிஞர்கள் பண்பாடு என்பதைப் பல கோணங்களில் ஆய்வு செய்து வருகின்றனர். அவ்வகையில் தனித்து தனித்தனியே வாழ்ந்த மனிதனை இணைத்து கூட்டமாக வாழவைத்ததேப் பண்பாடு என்கின்றனர். "இவற்றைத்தான் திரு புரோனிஸ்லா என்னும் இலண்டன் பள்ளிப் பேராசிரியர் பண்பாடு தனிமனிதனைக் கூட்டு வாழ்விற்குப் பற்றிச் செல்கிறது என்றும், அதன் வழியே சமூகம் உருவாகின்றது என்றும் காட்டுகிறார்" என இச்செய்தியைப் பரமசிவானந்தம் சமுதாயமும் பண்பாடும் என்னும் நூலின் வழி விளக்குகிறார்.

**தமிழ் இலக்கியத்தில் பண்பாடும் நாகரிகமும்**

சங்ககால இலக்கியங்கள் தொட்டு இன்று வரையிலான அனைத்து இலக்கியங்களும் பண்பாட்டுப் பின்புலங்களை அடையாளப்படுத்தியே வருகின்றன. இந்நிலையில் சங்க இலக்கியங்கள் முழுமையுமே தமிழர்களின் பண்பாட்டு நாகரிகத்தை வெளிப்படுத்தும் பெட்டகம் என்கின்றனர். மேலும் பண்பாடு என்ற சொல்லிற்கு "பண்பெனப்படுவது பாடு அறிந்து ஒழுகல்" எனக் கலித்தொகையில் சங்க காலத்திலேயே விளக்கம் தந்துள்ளார் இலக்கிய ஆசிரியர். அதனடிப்படையில் பண்புடைமையாவது பெருமை, சான்றாண்மைகளில்

தம் நிலை மாறாமல் நின்றே எல்லா இயல்புகளும் அறிந்து ஒத்துவாழ்தல் என திருக்குறளுக்கு பரிமேலழகர் விளக்கம் தந்துள்ளார். பண்பாடு, நாகரிகம் ஆகிய இருச்சொற்களும் ஒரே களங்களில் நின்று பொருள் உணர்த்தும் நிலைகளில் அமைகின்றன. இதன் காரணமாகவே நாகரிகம் என்ற சொல்லிற்கு தமிழ் இலக்கியங்கள் விளக்கம் அளிக்கின்றன. அவை "நஞ்சுயிர் செகுத்தலும், அறிந்துண்டாங்கு அளிஇன்மை கண்டுநின் மொழிதோறும் பெண்டிரும் ஏமுற்றார்" என்று நாகரிகம் என்பது நம்பிக்கையின் அடிப்படையில் உற்றவர் தீமை இழைக்கமாட்டார் என்ற உறுதியுடன், தீமை நேரின் இறக்காமல் வாழும் திறம் இருக்கும் என கலித்தொகையின் மருதகலி வழி ஆசிரியர் விளக்கம் தருகிறார். இதனையே "முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்" என நற்றிணையும் விளக்கம் தருகிறது. எனவே பண்பாடு, நாகரிகம் ஆகிய இருச்சொற்களும் பொருள் தொடர்புடையதாக காணப்படுகிறது.

**தமிழ் இலக்கண நூல்களில் பண்பாட்டுச் செய்திகள்**

தொல்காப்பியம் தொடர்ந்து தமிழ்மொழியின் வளமையைப் பறைசாற்றவும், தமிழர் வாழ்வியல் சார்ந்தப் பண்பாடுகளையும் எடுத்து இயம்பும் வகையில் பல இலக்கண நூல்கள் தோன்றியுள்ளன. இந்நூல்களில் ஒருசில நூல்கள் தமிழ்மொழியின் நுண்கூறுகளோடு அவற்றின் அமைப்பு முறைகளை மட்டும் வரிசைப்படுத்தி விளக்கியுள்ளன. ஒருசில இலக்கண நூல்கள் மொழியின் அமைப்பு நிலையை விளக்குவதோடு அவை சார்ந்தப் பண்பாடுகளையும் எடுத்துக் காட்டியுள்ளன. இறையனார் அகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை, அகப்பொருள் விளக்கம், நம்பியகப் பொருள் போன்ற நூல்கள் அகம், புறம் சார்ந்த இலக்கிய நூல்களின் அமைப்பு நிலையை கூறினாலும், அவ்விலக்கண நூல்கள் தமிழர்களின் அகம் சார்ந்த பண்பாடு, புறம் சார்ந்த பண்பாடு எவ்வாறு இருகோணங்களில் பார்க்கப்பட்டு போற்றப்பட்டது. என்ற வரலாற்றையும் விளக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நூல்களுக்கெல்லாம் முன்னோடி யாக அமைந்தவை தொல்காப்பிய பொருளதிகாரம் தமிழர்களின் பண்பாட்டை ஒவ்வொரு நிலையாக எடுத்து இயம்புவதுடன், மேலும் பொருளதிகாரத்தின் ஒவ்வொரு இயலும் தமிழர்களின் பண்பாட்டை பட்டியலிடுகின்றது. குறிப்பாக செய்யுளியல் தமிழ்ச் சமூக மக்களின் செய்யுள் சார்ந்த பண்பாட்டையும் எடுத்துக்காட்டுவது இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

**மெய்ப்பாட்டியல் விளக்கும் தமிழர்களின் பண்பாட்டு கூறுகள்**

உலகில் வாழும் அனைவருக்கும் எண்வகை மெய்ப்பாடு இயல்பான ஒன்று என்றாலும் அவை முறையே எந்தெந்த சூழல்களில் எவ்வகையான மெய்ப்பாடு ஏற்படும் என்று வரையறுத்த சிறப்புத் தொல்காப்பியத்தின் மேன்மையை வெளிப்படுத்தும் சிறப்புகளில் ஒன்று. உள்ளத்தில் நிகழும் மாற்றம், உள்ள நிகழ்ச்சி, அக உணர்வுகள் என மெய்ப்பாட்டுக்கு

விளக்கம் கொடுத்தாலும், இவை அனைத்தையும் வெளிப்படுத்துவது உடலின் உறுப்புகளே அதனைக் கொண்டே எட்டுவகை மெய்ப்பாட்டை வகைப்படுத்தியுள்ளார் ஆசிரியர். இவ்வாறு மெய்ப்பாட்டியலில் உடல்வழியான மெய்ப்பாடுகளை விளக்குவதுடன் தமிழரின் பண்பாட்டை விளக்கும் இலக்கியப் போக்கின் ஒரு பகுப்பான அகவாழ்க்கையின்கண் இயற்கை புணர்ச்சிக்கு முன் ஏற்படும் மெய்ப்பாடுகள், இயற்கைப் புணர்ச்சிக்குப்பின் ஏற்படும் மெய்ப்பாடுகள் என வகைப்படுத்தி தமிழர்களின் உடல்சார்ந்த பண்பாட்டு அடையாளங்களைப் பதிவு செய்துள்ளார். இத்துடன் களவுக்காலம் முடிவுபெரும் நிலையான திருமண ஏற்பாடுகளின் போது நிமித்தங்கள் பார்த்து அதன்வழியே திருமண நிகழ்வு ஏற்பாடுகளை மேற்கொள்ளும் தமிழரின் பண்பாட்டு விழுமியங்கள் இன்றளவும் காணப்படுவது தொல்காப்பிய தொடர்ச்சியே என்பதை நாம் அறியலாம்.

**மெய்ப்பாட்டியல் விளக்கும் குடும்ப அமைப்பு**

தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்களில் முக்கிய இடம் பெறுவது திருமணம் சார்ந்த சடங்குகளும் அவற்றை மேற்கொள்ளும் நடைமுறைகளாகும். அவ்வாறாக திருமணம் செய்யும் முன்பு பல்வேறு நிகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றிற்காக நிமித்தம் பார்த்தல், குலதெய்வ வழிபாடு போன்றவற்றோடு இல்லறம் சிறப்பாக அமைய பத்து வகை பொருத்தமான தலைவன் நல்ல பண்பாடு சார்ந்த குடும்பத்தில் இருத்தல், அக்குடிக்கேற்ற நல்லொழுக்கமுடையவனாக இருத்தல், திறமை, வயது ஒப்புமை, உருவ ஒற்றுமை, ஒழுக்கமுடைமை, ஆளுமையுடன் அன்பும் சேர்ந்திருத்தல் போன்ற பத்துவகையானப் பொருத்தமும் இருத்தல் வேண்டும் என்பதோடு, பொருந்தாத குணங்களையும் பட்டியலிடுகிறார்

தொல்காப்பியர் அவை பொறாமை, தீமையற்றத் தன்மை, புறங்கூறல், கடுஞ்சொல் பேசுதல், சோம்பேறித்தனம், மனைவியை பிற மகளிரோடு ஒப்புமைப்படுத்துதல் போன்ற நிலைகளையும் பட்டியலிட்டு இவைகளெல்லாம் தமிழர்களின் பண்பாடு சார்ந்த பார்வையின் அடையாளங்கள் என்பதை விளக்கியுள்ளார் தொல்காப்பியர்.

தொல்காப்பியம் தமிழ் மொழியின் சிறப்பை ஒவ்வொரு படியாக நுண்ணாய்வு செய்து விளக்குவது போன்று அம்மொழியை கையாளும் தமிழர்களின் பண்பாட்டு நிலை எவ்வாறெல்லாம் காணப்படுகிறது என்பதைப் பொருளதிகாரத்தின் வழி வரையறுத்து அதன் போக்கிலேயே இலக்கியமும் அமைய வகை செய்தமை குறிப்பிடதக்கது. பொருளதிகாரம் முழுவதும் ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தின் பண்பாட்டு நாகரிக கூறுகளை எடுத்து விளக்குவதுடன், மெய்ப்பாட்டியல் ஒட்டுமொத்த மக்களுக்கும் மெய்ப்பாடு உடல் உறுப்புகளால் வெளிப்படுகின்றன என வரையறுத்து சூழலுக்கு ஏற்ப எவ்வாறு வெளிப்படுகிறது என்பதை காட்சிபடுத்தி தமிழரின் பண்பாட்டு அடையாளங்களையும் படம் பிடித்துக்காட்டுகிறார். மேலும் தமிழரின் ஒவ்வொரு செயல்பாடுகளுக்கும் நிமித்தம், பொருத்தம், பார்த்தே அடுத்தக்கட்ட நிகழ்வுகளை மேற்கொள்வர் என்ற தமிழ் சமூகத்தின் முதன்மையான பண்பாட்டு கூரையும் விளக்கியுள்ளமை மெய்பாட்டியல் முழுவதுமே தமிழரின் பண்பாட்டுக் கூறுகளை எடுத்து விளக்கும் இயலாக வரையறுக்கலாம்.

**பார்வை நூல்கள்**

1. ஞா.மாணிக்கவாசகன் 2010 தொல்காப்பியம் மூலமும் உரையும், உமா பதிப்பகம், சென்னை - 001.

2. அ.மு.பரமசிவானந்தம் 1972 சமுதாயமும் பண்பாடும், தமிழ்க்கலைப் பதிப்பகம், சென்னை - 30.

3. சோம இளவரசு 2007 இலக்கண வரலாறு, மெய்ப்பன் பதிப்பகம், சிதம்பரம்-001.

# அன்பாதவனின் "ஒத்த அடி" சிறுகதை காட்டும் பண்பாட்டுக் கூறுகள்

***சி.சசிக்குமாரி,** *முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்), தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), சேலம் - 636007.*

**முன்னுரை**

மனிதன் வாழ்க்கையை வாழத் தொடங்கிய நாள் முதல் இன்று வரை அவனைச் செவ்வனே வழிநடத்திச் செல்வது பண்பாடு ஆகும். பண்பட்ட மனிதனையே சமுதாயம் உயர்வாக எண்ணிப் போற்றுகிறது. உலகம் நல்வழியில் அமைதியான முறையில் இயங்குவதற்கு மனிதன் கண்டறிந்த ஆயுதமே பண்பாடு ஆகும். இலக்கியம் என்பது வாழ்க்கையின் காலக் கண்ணாடி இவை பெரும்பாலும் மக்களின் வாழ்க்கை முறைகளையும் அனுபவங்களையும் எடுத்துரைக்கின்றன. அவ்வகையில் சிறுகதைகளில் சமகாலத் தளங்களில் வெளிப்படுத்தும் மனித வாழ்வியல் கூறுகளை முன்வைத்து அன்பாதவனின் 'ஒத்த அடி' சிறுகதையில் இடம்பெறும் பண்பாட்டுக் கூறுகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**பண்பாடு விளக்கம்**

தமிழர் பண்பாடு மிக உயர்ந்தது. உலகமெல்லாம் பாராட்டிப் பின்பற்றப்படுகிறது. பண்பாடு என்னும் வினைச் சொல் பண்படுதல், சீர்படுதல் என்ற பொருளில் அமைகிறது. பண்பாடு என்பது ஒரு சமூகத்தில் வாழ்க்கை முறை, பழக்கவழக்கங்கள், ஒழுக்கங்கள் போன்றவை பற்றியதாகும். பகுத்தறிவு உள்ள மனிதன் தன்னை மென்மேலும் பட்டை தீட்டிக் கொள்ள உதவும் சாணைக்கல்தான் பண்பாடு என்பர்.

பண்பாடு என்பது அன்றாட மனித வாழ்க்கையில் நிகழும் நிகழ்வுகள் ஆகும். அது தொடர்ச்சியாக நிகழ்ந்து கொண்டே இருக்கக்கூடிய நிலையில் மக்களின் பண்பாடாக அமைகிறது. "வாழ்க்கையை வாழ்ந்து முழுவதும் நுகர்வது என்பது ஒரு கலை. நுண்கலைகளில் ஒன்றாகக் கூறலாம். மனிதப் பண்பாட்டுக் கலைகளுடனும் அதனை ஒன்றுபடுத்தலாம். அதற்கு வாழ்க்கையின் அடிப்படைப் பண்பும் நோக்கமும் பற்றிய அறிவு வேண்டும்."1.என்பார்

**ஒத்த அடி சிறுகதையின் கதைச் சுருக்கம்**

சுகுமார் வக்கீலுக்குப் படித்தவர். தலித் இனத்தைச் சார்ந்தவர் ஆவார். எம்.எல்.ஏ வெங்கடாசலம் பழமலை படையாட்சியிடம் பணத்தை வாங்கிக் கொண்டு திருப்பித் தராததால் மனவேதனை அடைந்தார் பழமலை படையாட்சி. அவரின் மன வேதனையைப் போக்க வக்கீல் சுகுமாரின் முயற்சியால் ஒரே வாரத்தில் எம்.எல்.ஏ திவால் ஆனதாக உயர் நீதி மன்றம் அதிரடி உத்தரவு பிறப்பித்தது.

**விருந்தோம்பல்**

விருந்தோம்பல் என்பது தமிழர்களுக்கே உரிய தனிச்சிறப்பு ஆகும். அறிமுகம் இல்லாதவர் சொந்த பந்தம் இல்லாதவர் வழிப்போக்கர்கள் மற்றும் பிச்சைக்காரர்களுக்கும்

உணவளித்த பசியை நீக்குவது பண்டைத்தமிழரின் சிறந்த பண்பாக இருந்தது.தாங்கள் உணவு உண்ணும் முன்பு தங்கள் வீட்டு வாசலில் யாராவது இருக்கிறார்களா என்று பார்ப்பார்கள். அவ்வாறு இருந்தால் அவர்களையும் அழைத்து உணவளித்த பிறகு அவ்வீட்டார் உணவு உட்கொள்வர் என்ற பழக்கம் இருந்தது. இச்சிறுகதையில் முனியன் பழமலை படையாட்சி அவர்களுக்கு இளநீர் கொடுத்து உபசரித்தார். இதனை,

**“டேய் முனியா… இன்னும் ரெண்டு எளநி சீவுடா..” படையாட்சி**

**“போதுங்கய்யா.. இப்பவே மூனு காய் சாப்டாச்சு..”**

**அட என்னா தம்பி நீ ஒ(ன்) வயசுல**

**ஏழெட்டு இளநிய.. ஒரே தடவைல சாப்டுவன் நானு”**

**“அது சரிங்கய்யா. அதெல்லாம் அந்தககாலம். அதனால தான் உங்கள மாதிரி ஆளுங்க இந்த வயசிலேயும் தெம்பா தெடமா இருக்கீங்க.”2.**

என்று முனியன் கூறுவதன் மூலம் அறியலாம்.

**மனித நேயம்**

மனித நேயம் என்பது ஒரு மனிதன் மற்றொரு மனிதன் மீது பகுத்தறிவின் அடிப்படையில் கொள்ளும் பற்று ஆகும். மனிதநேயம் என்பது வெறும் மனிதாபிமானம் மட்டுமன்று.மனிதனுடைய எல்லையில்லாத எல்லை காட்ட இயலாத முழுமையான அறிவாற்றலும் ஆன்மிகச் செல்வமும் மனிதனுடைய பண்புகளும் ஆகிய இவையனைத்தையும் கொண்டது என்பர். இச்சிறுகதையில் சுகுமார் பழமலை படையாட்சிக்கு நடந்த அநியாயத்தை மனிதநேயத்துடன் அணுகியதை,

**“சுகுமார் ஊருக்கு போய் ஒரே வாரத்தில் செய்தி வந்து விட்டது.**

**“அரிசிப்பாளையம் எம்எல்ஏ**

**திவால் ஆனதாக**

**உயர்நீதிமன்றம் தீர்ப்பு**

**பதவி பறி போகிறது**

**வாங்கிய கடனை திருப்பி**

**செலுத்தாததனால் உயர்நீதிமன்றம்**

**அதிரடி உத்தரவு”** 3.

என்ற வரிகளின் மூலம் அறியலாம்.

**இசைக் கருவிகள்**

பாடல் பாடுதலை மையமாகக் கொண்டு வாழ்க்கை நடத்துபவர்கள் பாணர்கள் எனக் குறிக்கப்பெறுவர். பாடலொடு இசைக்கருவியையும் பயன்படுத்திதயவர்களும் பாணர்கள் என்றே அழைக்கப்பெற்றனர். பாணர்களிடம் உள்ள இசைக்கருவிகளை அடிப்படையாகக் கொண்டு அவர்களை இரண்டு வகைகளாகப் பகுத்தனர். சிறிய அளவிலான யாழ் எனும் இசைக் கருவியைப் பயன்படுத்திப் பாடல் பாடியோர் ‘சிறுபாணர்’ என்றும் குறிக்கப்பெற்றனர். இதனை, “இன்குரல் சீறியாழ் இடவயின் தழீஇ” 4. என்கிறது சிறுபாணாற்றுப்படை. அளவில் பெரிதான யாழ் எனும் இசைக்கருவியை வைத்துக்கொண்டு பாடல் பாடியவர்கள் ‘பெரும்பாணர்’ எனப்பட்டனர். இதனை,“இடனுடைப் பேரியாழ்”5 எனக் குறிக்கிறது. இச்சிறுகதையில் பழைய இசைக்கருவியான பறையின் சிறப்பை,

“பறை மேள இசையில் பல்வேறு பரிமாணங்கள் இருந்தாலும் இந்த ஒத்த அடிக்கு மட்டும் ஒரு ஸ்பெஷல் உண்டு. கேட்க கேட்க சுவையான சீரான ஓட்டம்… பர்வையாளர் களையும் ஆட வைக்கும் தாள லயம்… கடேய்சியில் கும்கும் என்று உச்ச ஸ்தாயியில் போய் நிறுத்தும் அழகு! அ! ஒத்த அடி ஒத்த அடிதான்….!” 6. என்னும் கூற்றின் மூலம் விவரித்துள்ளார்..

**வீரம்**

வீரம் தமிழனின் சொத்து. இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்று சொல்லும் அளவிற்கு தமிழ் இலக்கியங்கள் பலவும் தமிழனின் வீரம் பற்றிப் பேசுகின்றன. புறநானூறு,

**“புகழ் எனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்**

**உலகுடன் பெறினும் கொள்ளலர்” 7.**

என்ற அடிகளில் வீரத்தைப் பற்றிப் பேசுகின்றது. இச்சிறுகதையில் பழமலை படையாட்சியின் வீரப் பண்பை,

**“டேய் அந்தக் காலத்துல ரெண்டு தோள்லேயும் ரெண்டு மூட்டை நெல்லை வச்சிகிட்டு ஓடுனவன்டா நானு…”8** என்று பதிவு செய்கிறார்.

**கல்வி**

சமூகத்தில் கற்றவருக்கு மரியாதைஉண்டு. கல்லாதவரை விலங்குகளுக்கு இணையாக ஒப்பிட்டனர். பிறப்பினால் ஒருவன் கீழ்ச்சாதி என்று கருதப்பட்டாலும் , அவன் கற்ற கல்வி அவனை உயர்வான இடத்திற்குக் கொண்டு செல்லும். இச்சிறுகதையில் சுகுமார் தலித் இனத்தைச் சார்ந்தவராயினும் தனது கல்வியால் உயர்ந்த நிலையை அடைகிறார். இதனை, “எத்தனை பணமிருந்தாலும்…செல்வாக்கான பதவி இருந்தாலும் படிப்பும் திறமையும் அவற்றை வெற்றிக் கொள்ளும் என்பது நிரூபிக்கபட்டுவிட்டது.”9 என்னும் வரிகளின் மூலம் அறியலாம்.

**தோழமை உணர்வு**

சமூகம் என்பது தனிமனிதர் பலர் சேர்ந்து வாழும் அமைப்பு ஆகும். “சமூகம் என்பது தோழமை உணர்வு, கூட்டாக வாழ்தல், பொதுநலனைக் குறிக்கோளாகக் கொண்டு ஒன்று கூடி செயல்படும் குழுவினர் என்று கூறலாம். “சமூகம் என்பது குறித்த ஒரு வாழ்வு நெறியையும் பண்பாட்டையும் வளர்ப்பதில் பங்கு பெறும் தனிமனிதர் பலரில் கூட்டமைப்பாகும் என்கிறார் கு.வெ.பாலசுப்பிரமணியன் அவர்கள்.” 10. இவ்வாறாக சமூக வளத்திற்கு தோழமை உணர்வு தேவை என இச்சிறுகதையில் உணர்த்தப்படுகிறது. அனைத்து சமூகத்தினரும் சேர்ந்து வாழ்ந்தனர். இதனை,

“குடியானத் தெருவையும் காலனியையும் பிரிக்கிற இடத்தில் அமைந்திருந்த டீக்கடையில் தன் சகாக்களோடு டீக்குடித்துக் கொண்டு பேசிக்கொண்டிருந்தான் சுகுமார். அதே நேரம் கடையில் வந்து அமர்ந்த பெரியவர் பழமலை படையாட்சி வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவியபடி கேட்டார். தம்பி யாரு? பாத்த மொகமாத்தான் தெரியுது” 11 என்ற வரிகளால் அறியலாம்.

**சமுதாயக் கொடுமை**

சாதி, மதம் போன்றவற்றால் உலகில் மக்களிடையே ஏற்றத்தாழ்வுகள ஏற்படும். பிறப்பால் அனைவரும் சமம் என்கிறார் வள்ளுவர். செய்யும் தொழில் வேறுபட்டிருந்தாலும் அவருக்குரிய சிறப்பு குறைந்து விடாது என்கிறார். இதனை

**“ பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**

**செய்தொழில் வேற்றுமை யான்”12.**

இச்சிறுகதையில் தலித் மக்களின் வாக்குரிமையைத் தவறாகப் பயன்படுத்தியதைத் தட்டிக் கேட்ட மக்களிடம் ஏளனமாகப் பேசியதை, "வெங்கடாசலத்தைப் போய் நம்மாளுங்க கேட்டதற்கு ஒங்க ஓட்டையெல்லாம் எங்காளுங்களே போட்டுறுவாங்க... போய் மில்லுல சாராயமும் பிரியாணியும் வாங்கிட்டு ஊரைப் பார்த்து போய்ச் சேருங்கடாண்ட்டாரு" 13. என்று பதிவு செய்கிறார்.

**முடிவுரை**

மனிதனின் வாழ்வில் நடக்கும் எதிர்பாராத நிகழ்வுகள் அவனது வாழ்க்கை இயல்புகளை எங்ஙனம் புரட்டிப் போடுகிறது என்பதை எம்.எல்.ஏ வெங்கடாசலம் கதாபாத்திரம் உணர்த்துகிறது. மனித வாழ்க்கை பண்பாடு, கலாச்சாரங்களால் கட்டமைக்கப்பட்டதாகும். தலித் இனத்தைச் சார்ந்தவராயினும் தனது கல்வியால் சமுதாயத்தில் உயர்வை அடைய முடியும் என்பதை சுகுமார் கதாபாத்திரம் உணர்த்துகிறது.

**சான்றெண் விளக்கம்**


1. கா.அப்பாத்துரையார், வாழும் வகை,ப.183
2. தலித் சிறுகதைத் தொகுப்பு, ப.சிவகாமி (தொ.ஆ) ப.158
3. தலித் சிறுகதைத் தொகுப்பு, ப.சிவகாமி (தொ.ஆ) ப.160)
4. (சிறுபாண்-35)
5. (பெரும்பாண்-462)
6. தலித் சிறுகதைத் தொகுப்பு, ப.சிவகாமி (தொ.ஆ) ப.154
7. புறம் பா.182
8. தலித் சிறுகதைத் தொகுப்பு, ப.சிவகாமி (தொ.ஆ) ப.152)
9. தலித் சிறுகதைத் தொகுப்பு, ப.சிவகாமி (தொ.ஆ) ப.153)
10. தமிழ் இலக்கியத்தில் சமூக அமைப்புகள் ப.1
11. தலித் சிறுகதைத் தொகுப்பு, ப.சிவகாமி (தொ.ஆ) ப.155
12. குறள் 972
13. தலித் சிறுகதைத் தொகுப்பு, ப.சிவகாமி (தொ.ஆ) ப.157

# அந்திவானம் நாவலில் குடும்ப உறவுமுறைச் சித்தரிப்பு

*செ.ரேவதி, *முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்), தமிழ் உயராய்வுத் துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), எளையாம் பாளையம் - 637205*

**முன்னுரை**

நாவல் இலக்கியமானது குறிப்பிட்ட பகுதியில் வாழும் மக்களின் வாழ்வியல் விழுமியங்களைப் பதிவு செய்வதாகும். மேலும் குறிப்பிட்ட சமூகம் சார்ந்த மக்களின் வாழ்க்கை முறைகள் எதிர் கொள்ளும் சிக்கல்கள் பழக்க வழக்கங்கள் உட்பட அனைத்து வாழ்வியல் கூறுகளையும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்படுவது நாவல் இலக்கியமாகும். சமுதாயத்தின் மிகப் பழமையான நிறுவனம் குடும்பம் ஆகும். பிறப்பு முதல் இறப்பு வரை குடும்பத்துடன் தான் மக்கள் தொடர்ச்சியாகத் தொடர்பு கொள்கின்றனர். அதனால் வாழ்வியல் சார்ந்த அனைத்துத் தேவைகளையும் குடும்பம் நிறைவு செய்கிறது. இந்தியாவில் பல்வேறு சிக்கல்களுக்கிடையேயும் குடும்பம் என்ற அமைப்பானது தொடர்ந்து இயங்கி வருகிறது.

அந்தி வானம் என்னும் தன் நாவலில், நாவலாசிரியர் முத்துலட்சுமி ராகவன் அவர்கள் வெளிப்படுத்தும் குடும்ப உறவு முறைகளில் கணவன் மனைவி, தாய் மகன், தந்தை மகள் ஆகிய உறவு முறைகள் பற்றி இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

**குடும்ப உறவு**

கணவன், மனைவி, குழந்தை, உறவினர் என அனைவரும் கூடி வாழும் ஒரு சமூக அமைப்பு வாழ்க்கையே குடும்பம் என்று அழைக்கிறோம். இலக்கியங்களில் குடி, மனை, அறம் என்ற சொற்கள் குடும்பத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மனைவி மக்களோடு வாழும் இல்லறமே நல்லறமாகும். பிறர் பழித்துப் பேசாத அளவுக்கு அவர்களை அரவணைத்துச் செல்வதே குடும்பக் கடமைகளில் ஒன்றாகும். இதனை,

> **"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்**
>
> **பிறன்பழிப்ப தில்லாயின் நன்று"**1

என்ற குறள் வழி அறியலாம்.

குடும்பம் என்பது தந்தை தலைவனாகப் பொறுப்பேற்று வழிநடத்திச் செல்வதாகும். இதனை,

> **"பெருமையும் உரனும் ஆடூஉ மேன"** 2

என்ற அடிகளின் மூலம் அறியலாம்.

**அந்திவானம் கதைக்கரு**

காதலித்துத் திருமணம் செய்துகொண்ட ஒரு பெண்ணின் துயரத்தைக் காட்டுவதாக இக்கதை அமைகிறது. பூங்கொடி என்பவள் பிரசன்னாவைக் காதலித்துத் திருமணம் செய்து கொள்கிறார். இதனையறிந்த பூங்கொடியின் பெற்றோர் தற்கொலை செய்து கொள்கின்றனர். பெற்றோர் இறந்ததை எண்ணி மிகவும் மனவேதனை அடைகிறாள். தான் காதலித்தது குற்றமா? என்று வேதனை அடைந்து கடைசியில் அவளும் இறந்தே போகிறாள் என்பதாகக் கதை அமைகிறது.

**கதைச்சுருக்கம்**

சங்கரின் தாய் தந்தையர் சாலை விபத்தில் இறந்துவிட்டனர். அதனால் சங்கரின் சித்தப்பா வரதராசன் சங்கரை தத்துப்பிள்ளையாக வளர்த்து வந்தார். அவருக்கு பூங்கொடி என்ற மகள் இருக்கிறாள். சங்கர், பூங்கொடி ஆகிய இருவரும் ஒரு தாய் பிள்ளைகள் போல அண்ணன் தங்கையாக வளர்ந்து வந்தனர்.

பூங்கொடி பிரசன்னாவை விரும்பினாள். அதனைத் தன் அண்ணன் சங்கரிடம் கூறினாள். இது போன்ற காதல், குடும்பத்துக்கு ஒத்துவராது என்று சங்கர் கூறினான். அதனைக் கேட்காமல் பூங்கொடி பிரசன்னாவைத் திருமணம் செய்து கொண்டாள். மகள் காதல் திருமணம் செய்து கொண்டதை நினைத்து வருந்தி இறந்துவிட்டனர்.

ஊட்டியில் பிரசன்னாவும் பூங்கொடியும் பெரிய பங்களாவில் வாழ்ந்து வந்தனர். பூங்கொடி திருமண வாழ்வில் சற்று ஒட்டுதல் இல்லாமல் விலகியே இருந்தாள். சங்கர் அடிக்கடி தங்கையைப் பார்த்து வந்தான்.

சங்கருக்கும் யமுனாவுக்கும் திருமணம் நடந்தது. மாளவிகா என்ற பெண் குழந்தை பிறந்தது. பிரசன்னா பூங்கொடிக்க அழகான ஆண் குழந்தை பிறந்தது. மாளவிகா வளர்ந்து கல்லூரிக்குச் சென்றாள். கல்லூரி விழாவிற்காக நன்கொடை வாங்க விஷால் குரூப் ஆப் கம்பெனியின் எம்.டி விஷாலை சந்தித்து விழாவிற்கு அழைத்தாள். விஷால் ஒரு பெரிய தொகையை நன்கொடையாக வழங்கினான். விஷால் மாளவிகாவை விரும்பினான். விஷால் மாளவிகா திருமணத்திற்கான திருமண வேலைகள் நடந்தது.

பிரசன்னாவிற்கு பத்திரிகை வைக்க சங்கர் ஊட்டிக்குச் சென்றான். அங்கே மறைந்த தன் தங்கையின் புகைப்படத்தைக் கண்டான். பத்திரிகையை மச்சினனுக்கு மரியாதையுடன் வைத்துவிட்டு ஊர் திரும்பினான்.

திருமணநாள் நெருங்கியது. மணமேடையில் விஷாலும் மாளவிகாவும் அமர்ந்திருக்க, பிரசன்னாவுடன் வசந்தன் திருமணத்திற்கு வந்திருந்தனர். அட்சதை வழங்க வந்த பெண்ணின் கையில் உள்ள தட்டில் இருந்த தாலியை வசந்தன் எடுத்துக் கொண்டான். மாளவிகாவைத் தனக்குத் திருமணம் செய்துகொடுக்க சங்கரிடம் கூறினான். சங்கரும் சம்மதித்தார். மாளவிகா வசந்தனுக்கு திருமணம் நடைபெற்றது. அதே வேளையில் விஷாலுக்கும் அவனுடைய அத்தை மகள் மேகாவிற்கும் திருமணம் நடந்தது.

வசந்தன் சங்கரைப் பழிவாங்கத்தான் மாளவிகாவைத் திருமணம் செய்து கொண்டான். ஆனால் மாளவிகா தன் அன்பால் வசந்தனைக் கட்டிப்போட்டாள். மாளவிகாவின் அறிவால் வசந்தனை நல்வழிப்படுத்தினாள். ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தாள். குடும்பமே அழகாக மாறியது. அனைவரும் மகிழ்ச்சியாக இருந்தனர். இந்த உலகம் என்பது மனிதர்கள் இரைதேட வந்த இடம். இரையைத் தேடியபின் கூட்டுகுச் செல்லும் பறவைகள்போல் மனிதர்களும் நிரந்தரக் கூட்டுக்குச் செல்லவேண்டும் என்பதை,

“அந்தி வானத்தில் பறவைகள்... இரைதேடி முடித்து கூட்டுக்குத் திரும்பின... அவர்களும் வீட்டிற்குத் திரும்பினார்கள்.”3

என்று கதையை ஆசிரியர் நிறைவு செய்கிறார். இக்கதையில் மகள் காதலித்துத் திருமணம் செய்துகொண்டதால் பெற்றோர் மனவேதனையடைந்து தற்கொலை செய்து கொள்ளும் நிலையை ஆசிரியர் நுட்பமாக விவரித்துள்ளார்.

**கணவன் மனைவி உறவு**

கணவன் மனைவியிடம் மனம் விட்டுப் பேசுவதால் ஒருவரின் உணர்வை மற்றவர் புரிந்துகொண்டு, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துப் போவதால் குடும்ப வாழ்வில் பலவித சிக்கல்கள் வராமல் தவிர்க்கலாம். குடும்பம் நடத்துவதற்கு இருவரும் சரிபாதியாக குடும்பப் பொறுப்பில் பங்கெடுத்து அனுசரித்தால் அன்பும் பாசமும் கொண்டு வாழலாம்.

அந்திவானம் என்ற இக்கதையில் பூங்கொடி காதல் திருமணம் செய்து கொண்டதைத் தாங்கிக் கொள்ள மாட்டாமல் அவளின் பெற்றோர் தற்கொலை செய்துகொள்கின்றனர்.

பெற்றோர் இறந்த வேதனையில் பூங்கொடி இல்லற வாழ்விலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாமல் இருக்கிறாள். இதனை,

"பூங்கொடி பொங்கிக் கதறினாள். அத்தனை நாளும் அவள் மனதுக்குள் பொங்கிக்கிடந்த உணர்வுகள்... பேரலையாய்... பொங்கி... கரை கடந்தன...கரை கடந்த உணர்வின் வேகம் தாளாமல் பிரசன்னா இரண்டே எட்டில் மனைவியை அணுகி... தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டான்.. அவள் விலகாமல் அவன் மார்பில் முகம் புதைத்து கதறியழ.. சங்கர் யமுனாவைப் பார்த்தான்." 4

என்ற கூற்றின் மூலம் அறியலாம். இதில் கணவன் மனைவியின் கவலையைப் போக்க ஆறுதலாய் இருக்கிறான். மேலும் இக்கதையில் பூங்கொடி இறந்துவிட்டதை நினைத்து பிரசன்னா கதறியழுகிறான். இதனை,

"உங்க மடியில் தலைவைத்துக்கவா..?" என்ற அவள் கேட்கும்போதே... பிரசன்னாவிற்கு நெஞ்சைப் பிசைய ஆரம்பித்துவிட்டது. அவன் மடியில் தலை வைத்தவள்... அடுத்த சில நிமிடங்களில் கண் மூடிவிட்டாள்..

மனைவியை இறுக்கிக் கொண்டு பிரசன்னா கதறிய கதறலில் அந்த மருத்துவமனையே ஆட்டம் கண்டது.." 5

என்ற கூற்றில் கணவன் மனைவியின் இறப்பால் அடையும் துயர நிலை மிகக் கொடுமையானது என்பதை ஆசிரியர் படம்பிடித்துக் காட்டுகிறார்.

யமுனா பொறுமைக்குணம் உடையவள். ஆனால் தவறு என்று அறிந்தால் தட்டிக் கேட்கும் குணமுடையவள். இதனை,

"யமுனா மென்மையானவள். சங்கரின் மேல் அதிகமான காதல் கொண்டவள்... ஆனால் நியாயவாதி.. நியாயம் என்று வந்துவிட்டால் அவள் கேள்வி கேட்கத் தயங்கவே மாட்டாள்..அது சங்கராக இருந்தாலும் சரி." 6

என்ற கூற்றில் நியாயத்தைக் காப்பாற்ற தன் கணவனாக இருப்பினும் எதிர்த்துக் கேட்கும் குணமுடையவள் என்பதை ஆசிரியர் காட்டுகிறார்.

**தாய் - மகள் உறவு**

மனித உறவுகளிலேயே முதன்மையானது தாய் உறவாகும். தான் பெற்ற பிள்ளைகளுக்காகவும் தன்னுடைய குடும்பத்தின் நலனுக்காகவும் தன்னையே முழுமையாகக் கொடுத்துதவும் உள்ளம் கொண்டவள் தாய். தாய் தன் குழந்தைகளை வீரத்தோடும் புகழோடும் வளர்த்ததை ,

**"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே**

**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே" 7**

என்று புறநானூறு கூறுகிறது. இக்கதையில் தாயும் மகளும் பாசமாக இருப்பதை,

**" 'எனக்கு நீ செல்லம்தான்... தங்கம்தான்.. கண்ணம்மாதான்..'**

**நான் குளிக்கலைன்னா திட்டு.. குளிச்சிட்டு வந்தா கொஞ்சு" 8**

என்ற வரிகளின் மூலம் அறியலாம். மேலும் இந்நாவலில் யமுனா தன் மகள் மாளவிகாவை மணமேடைக்குத் தயார் செய்கிறாள். இதனை,

**"தூங்கி எழுந்த முகத்துடன் கண்ணை கசக்கிக்கிட்டு.. அப்படியே நீ மணமேடைக்குப் போய் உட்காருவாயா..?"**

**“வேற என்ன செய்யணும்கிற..”**

**“குளித்து.. புதுப்புடவை கட்டி.. அலங்காரம் பண்ணிக்கணும்..” 9**

என்ற வரிகளின் மூலம் அறியலாம்.

**தாய் மகன்**

தாய் மகன் மனம் விட்டுப் பேசிக் கொள்வது இயல்பு, தாயிடம் மகனும், மகனிடம் தாயும் தன் கவலையைப் பகிர்ந்து கொள்கின்றதைக் காணமுடிகின்றது. அந்திவானம் என்ற நாவலில் தாயிடம் தன் அத்தை கோபப்படுவதற்கான காரணம் பற்றி, கேட்கிறான். அதற்குத் தாய் காரணம் கூறுகிறாள். இதனை,

**“என்ன மம்மி..?”**

**“உன் அத்தை கோவமாய் கத்திக்கிட்டு இருக்கிறாள் விஷால்..”**

**“கோயமுத்தூர்காரங்கதானே.. கோபம் அதிகமாக வரத்தான் செய்யும்..? இப்ப எதுக்கு கோபப்படுகிறாங்களாம்..?”**

**“அவங்க பெண் இருக்கம்போது நாம வெளியே பெண் எடுக்கிறோமாம்..” 10**

என்ற வரிகளின் மூலம் அறியலாம்.

**தந்தை மகள்**

தந்தை மகள் உறவானது மிகவும் பாசப்பிணைப்பானதாகும். ஒரு தாய்க்கு மகன் மீது அதிகம் அன்பு இருப்பதைப் போல தந்தைக்கு மகள் மீது அன்பும் பாசமும் அதிகம் இருக்கும்.

“குழந்தைப் பருவத்தில் மகளைச் சீராட்டிப் பாராட்டி வளர்க்க வேண்டிய தந்தை அதிலிருந்து மாறுபடும்பொழுது தந்தைக்கும் மகளுக்கும் இடையே இயல்பாக வளர வேண்டிய பாசமிக்க உறவு குறைந்தோ அல்லது மறைந்தோ விடுகிறது” 11

என்ற கூற்று இங்கு ஒப்புநோக்கத்தக்கதாகும்.

இந்நாவலில் தந்தையும் மகளும் தேவையில்லாதவற்றை ஆலோசித்தால் விவாதம்தான் வரும் என்று மகள் தந்தையிடம் கூறுகிறாள். இதனை,

“நீங்க உங்களுக்கு முக்கியம்னு படுவதை எங்கிட்டச் சொல்வீங்க.. எனக்கு அது முக்கியமில்லாததாய்ப் படலாம்.. ஸோ.. ஆர்கியூமெண்டை அவாயட் பண்ணனும்னா.. தேவையில்லாம டிஸ்கஸ் பண்ணக் கூடாது..” 12

என்ற வரிகளால் அறியலாம். மேலும் இந்நாவலில் தந்தையின் கம்பெனிக்கு தன் தோழிகளுடன் சென்று அக்கம்பெனியின் எம். டி யைச் சந்திக்கின்றனர். அப்பொழுது தந்தையும் மகளும் பேசிக்கொள்வதை,

“டாடி..” என்றபடி கேபினுக்குள்..பெண்கள் கூட்டம் புடைசூழ வந்து நின்ற மாளவிகாவைப் பார்த்ததும் அவனுக்கு தூக்கி வாரிப் போட்டது..

“என்னம்மா.. இப்படி திடுதிப்புன்னு வந்து நிற்கிற..?”

“ஒன்றுமில்லை டாடி.. உங்க உம்டியைப்பார்க்க வந்திருக்கிறோம்.. போகிற வழியில் உங்க ரூமுக்கு ஜஸ்ட் எ விசிட் அடித்தோம்..” 13

என்ற வரிகளால் அறியலாம். மேலும் இந்நாவலில் மாளவிகாவின் தந்தை சங்கர் விஷாலிடம் பேசி, மகளின் கல்லூரி நிகழ்வுக்கு அழைப்பிதழ் கொடுக்க ஏற்பாடு செய்தார். இதனை,

“எங்க காலேஜ் பங்சனுக்கு.. நாங்களே நேரே வந்து இன்வைட் பண்ணினால்தான் மரியாதையாக இருக்கும்.. இல்லைடி..” மீண்டும் மாளவிகா கண்சிமிட்ட.. தோழிகள்.. ‘ஆமாம்’ போட்டார்கள்..

‘பிடித்தால் ஒரே பிடிதான்..’ மகளை நினைத்து செல்லப் புன்முறுவல் பூத்தபடி.. விஷாலிடம் போனில் பேசி.. மாளவிகா அவனைச் சந்திக்க அனுமதி வாங்கிக் கொடுத்தான் சங்கர்..” 14

என்ற வரிகளின் மூலம் அறியலாம்.

**சித்தி மகன்**

அந்தி வானம் என்ற நாவலில் சங்கரின் பெற்றோர் இறந்துவிடுகின்றனர். அந்நிலையில் அவனுடைய சித்தி வளர்த்து வந்தார். அவனும் சித்தி மேல் பாசம் கொணடடவனாக இருந்தான். இதனை, “ சங்கர் துக்கத்துடன் கோதை நாச்சியாரைத் தேடிச் சென்றான். அவள் ஒரு மூலையில் சுருண்டு படுத்துக் கிடந்தாள்..

நான் உனக்கு சித்தி இல்லைடா சங்கர்.. அம்மா.. என்று கூறி அவனை அரவணைத்து வளர்த்த தாய் அநாதை போலச்சுருண்டு கிடப்பதைக் காணச் சகிக்காதவனாய் அவளருகில் அமர்ந்து.. எழுப்பினான் சங்கர்..

**“என்னப்பா..”**

**“ஒரு வாய் பாலையாவது குடிங்கம்மா..”**

**“என்னை விட்டுடு சங்கர்”15**

என்ற வரிகளின் மூலம் சித்தி மகன் பாசத்தைப் படைத்துக்காட்டுகிறார்

**அண்ணன் தங்கை உறவு**

குடும்பத்தில் அண்ணன் தங்கை உறவுமுறை இணைபிரியாதது. இன்பத்திலும் துன்பத்திலும் பங்கெடுத்துக் கொள்வர் இவர். உடன்பிறந்தவர்களிடத்தில் இருக்க வேண்டிய உரிமையுணர்வையும், கடமையுணர்வையும் எடுத்துச் சொல்லும் பொறுப்பு பெற்றோருக்கே உண்டு எனலாம்.

அண்ணன்-தங்கை பாசம் இறக்கும் வரையில் இருக்கும். பெற்றோரின் சொத்தில் ஆண் பெண் இருவருக்கும் பங்கு உண்டு. அதை இருவரும் உறவைப்போல் பங்கிட்டுக் கொள்ள வேண்டும். தொடக்க காலங்களில் சீர்வரிசை செய்து பெண்ணை திருமணம் செய்து கொடுத்து விடுவர். சொத்தில் பங்கு ஆண்களுக்கு மட்டும்தான் தருவார்கள். காலச் சூழலுக்கு ஊற்றாற் போல் தற்காலத்தில் ஆண், பெண் இருவருக்கும் சொத்தில் சரிபாதி பங்கிட்டுக் கொள்வதைக் காணமுடிகிறது.

அந்திவானம் என்ற நாவலில் நற்குணம் இல்லாதவனைக் காதலிக்கும் தன் தங்கைக்கு அறிவுரை சொல்ல நினைக்கிறான் அண்ணன் இதனை,

“அயோக்கியர்களிலேயே கடைந்தெடுத்த அயோக்கியனைப் போய் காதலித்து வைத்திருக்கும் தங்கையின் காதலை ஆதரிப்பதா..?

ஒரு பாசமுள்ள அண்ணனாகப் பரிதவித்தான் சங்கர்.. தங்கைக்குப் புத்திமதி சொல்ல எவ்வளவோ முயன்றான்..”16 என்ற வரிகளால் தங்கைக்கு அறிவுரை சொல்லும் அண்ணனின் பண்பை அறியமுடிகிறது.

**முடிவுரை**

சமுதாயத்தின் மிகப் பழமையான நிறுவனம் குடும்பம் ஆகும். பிறப்பு முதல் இறப்பு வரை குடும்பத்துடன் தான் மக்கள் தொடர்ச்சியாகத் தொடர்பு கொள்கின்றனர். அதனால் வாழ்வியல் சார்ந்த அனைத்துத் தேவைகளையும் குடும்பம் நிறைவு செய்கிறது. இந்நாவலில்

பூங்கொடி காதல் திருமணம் செய்து கொண்டதைத் தாங்கிக் கொள்ள மாட்டாமல் அவளின் பெற்றோர் தற்கொலை செய்துகொள்கின்றனர். கணவன் மனைவி உறவு என்பது ஒருவருக் கொருவர் மனம் விட்டுப் பேசி மனக் கவலையைப் போக்க உதவுகிறது. தாய் தன் மகளுக்கு அறிவுரை கூறி நல்வழிப்படுத்தும் நிலையையும், தாய்க்கு பக்க பலமாக விளங்குவது மகன் என்பதையும், தந்தை மகள் உறவானது மிகவும் பாசப்பிணைப்பானது என்பதையும் அறிய முடிகிறது.

**சான்றெண் விளக்கம்**


1. திருக்குறள் - 49
2. தொல்காப்பியம். அறிஞர் ச.வே. சுப்பிரமணியன், பொருள். களவு. நூற்பா 1044, மணிவாசகர், பதிப்பகம், பாரிமுனை, சென்னை - 600108, பன்னிரெண்டாம் பதிப்பு, மார்ச் 2016
3. அந்திவானம், முத்துலட்சுமி ராகவன், ப. 272, முதற்பதிப்பு மே.2015 லட்சுமி பாலாஜி பதிப்பகம் தி.நகர், சென்னை-600035
4. மேலது, ப.121,
5.. மேலது ப.134,
6. மேலது.ப. 113,
7. புறம். 312
8, அந்திவானம், முத்துலட்சுமி ராகவன ப. 17 முதற்பதிப்பு மே.2015, லட்சுமி பாலாஜி பதிப்பகம் தி.நகர், சென்னை-600035
9. மேலது ப. 180
10 மேலது, ப. 174
11. லஷ்மி சூடாமணி நாவல்கள் ஓர் ஆய்வு, சித்திரலேகா, ப.176 , சினேகா வெளியீடு, குற்றாலம்.
12. அந்திவானம், முத்துலட்சுமி ராகவன், ப.13, முதற்பதிப்பு மே.2015 லட்சுமி பாலாஜி பதிப்பகம் தி.நகர், சென்னை-600035
13. மேலது ப. 141
14. மேலது ப. 142
15. மேலது ப.49
16. மேலது ப.27